# உதயன்

சுடர் : 36 கதிர் : 261 | திங்கட்கிழமை | ஆடி 31 ஆம் நாள் 16 ஒகஸ்ட் 2021 | வள்ளுவர் ஆண்டு 2052 | பக்கங்கள்: 20 விலை: 30 | செய்தி : 021 493 0000 விளம்பரம்: 021 493 1111




## கொவிட் பலி 161

கொழும்பு, ஓக. 16
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றால் உயிரிழந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 6 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது. நாட்டில் மேலும் 161 பேர் கொரோ 19



# இன்று இரவு முதல் மீண்டும் ஊரடங்கு

### மறு அறிவித்தல் வரை தொடரும் என்கின்றார் இராணுவத் தளபதி

கொழும்பு, ஒகஸ்ட் 16
நாடு முழுவதும் இன்று முதல் இரவு 10 மணி முதல் அதிகாலை 4 மணிவரை தனிமைப்படுத்தல் ஊரடங்கு உத்தரவு அமுலில் இருக்கும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. கொரோனாத் தடுப்புச் செயலணியின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா இதனைத் தெரிவித்துள்ளார். 19

## கொரோனா 3,435

கொழும்பு, ஓக. 16
இலங்கையில் நேற்று மாத்திரம் 3 ஆயிரத்து 435 பேர் கொரோனா வைரஸ் தொற்றுடன் அடையாளம் காணப்பட்டுள்ளனர். சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு 19

## எதிர்வரும் நாள்கள் மிக ஆபத்தானவை

### டெல்டா பரவல் மேலும் தீவிரமடையலாம்; மக்கள் அவதானம் என்கின்றார் ஜயசுமன

கொழும்பு, ஓக. 16
'உலகளாவிய ரீதியில் பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தக் கூடியதாக உருவெடுத்துள்ள கொரோனாவின் டெல்டா வைரஸ் பரவலானது, இலங்கை 19

## நிபுணர்கள் பரிந்துரைத்தால் நாடு உடன் முடக்கப்படும்!

### அரசு நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஓக. 16
'நாட்டை முடக்குமாறு சுகாதார நிபுணர்களால் உத்தியோகபூர்வமாகப் பரிந்துரைக்கப்பட்டால் அதனை உடனே செயற்படுத்த அரசு தயார்' இவ்வாறு இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் வைத்தியர் சன்ன ஜயசுமன தெரிவித்தார்.
எவ்வாறாயினும் இதுவரையில் அவ்வாறான பரிந்துரைகள் முன்வைக்கப்படவில்லை என்றும் 19

## திருமண நிகழ்வுகள் நடத்துவதற்கு தடை

கொழும்பு, ஓக. 16
இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்று அதிகரித்து வரும் நிலையில் அதனைக் கட்டுப்படுத்தும் வகையில் நாளை செவ்வாய்க்கிழமை நள்ளிரவு முதல் திருமண நிகழ்வுகளுக்குத் தடைவிதிக்கப்பட்டுள்ளது.
அதற்கமைய எதிர்வரும் 17 ஆம் திகதி நள்ளிரவு முதல் வீடுகளிலும், மண்டபங்களிலும் திருமண நிகழ்வுகளை நடத்த அனுமதி 19

## கிணற்றுக்குள் சடலம் பொலிஸ் விசாரணை!

கிளிநொச்சி, ஓக. 16
கிளிநொச்சி கரைச்சி பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட இரத்தினபுரம் பகுதியில் கிணறொன்றுக்குள் பாயால் மூடப்பட்ட நிலையில் சடல 19

## மடு அன்னையின் பெருவிழா நேற்று

மன்னார், ஓக. 16
மன்னார் மடுத் திருப்பதியின் திருவிழா நேற்று கொவிட் பாதுகாப்பு நடைமுறைகளுக்கு அமைய அமைதியாக நடைபெற்றது.
மன்னார் மறைமாவட்டத்தின் ஆயர் இம்மனுவல் பெர்னான்டோ தலைமையில் இந்தத் திரு 19

## வீடொன்றின் மீது கும்பல் தாக்குதல்

யாழ்ப்பாணம், ஓக. 16
யாழ்ப்பாணம் உரும்பிராய் பகுதியில் வீடொன்றின் மீது வன்முறைக் கும்பல் பெற்றோல் குண்டுவீசித் தாக்குதல் நடத்தியுள்ளது. இந்தத் 19

## டிப்பர் வாகனம் மோதி குடும்பப்பெண் இறப்பு!

யாழ்ப்பாணம், ஓக. 16
கோப்பாய் கைதடி வீதியில் டிப்பர் வாகனம் மோதியதில் மோட்டார் சைக்கிளில் பயணித்த குடும்பப் பெண் உயிரிழந்தார். சுழிபுரத்தைச் சேர்ந்த தருணேஸ் சாந்தி (வயது 35) என்பவரே உயிரி 19

## ஆப்கானில் ஆட்சியை கைப்பற்றியது தலிபான்

### அதிபர் அஸ்ரப் கானி தஜிகிஸ்தான் சென்றார்

காபூல், ஓக. 16
ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூல் தலபான்களின் கட்டுப்பாட்டுக்குள் வந்துள்ளது. இதையடுத்து அந்த நாட்டின் ஆட்சியதிகாரம் தலிபான்களிடம் முழுவதுமாகச் சென்றுள் 19



## பொலிஸ் என்று கூறி கொள்ளை: சந்தேகநபரொருவர் கைதானார்

யாழ்ப்பாணம், ஓக. 16
தன்னை பொலிஸ் என்று அடையாளப்படுத்தி தந்திரமான முறையில் கொள்ளை மற்றும் திருட்டுச் சம்பவங்களில் ஈடுபட்ட நபர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார். 19

## வவுனியா மருத்துவமனை விடுதிகள் கொவிட் தொற்றாளர்களால் நிரம்பின

வவுனியா, ஓக. 16
வவுனியா மருத்துவமனையில் உள்ள கொவிட் நோயாளர் பிரிவுகள் இரண்டும் முழுமையடைந்துள்ளன என்று மருத்துவமனைத் தகவல்கள் தெரிவித்தன.
நாட்டின் பல பகுதிகளிலும் உள்ள கொவிட் மருத்துவமனைகளின் விடுதிகளும் தொற்றா 19

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# ஒட்சிசன் இருந்தும்கூட மக்கள் இறப்பதற்காக காத்திருக்கிறார்கள்

## கொவிட்-19 சிகிச்சை விடுதியில் பணிபுரியும் ஒரு மருத்துவரின் பதிவு இது

**கொழும்பு, ஓக. 16**

**ஒட்சிசன் வழங்கல் இயந்திரங்கள் அதிகபட்சமாக இருந்தும்கூட பொதுமக்கள் இறப்பதற்காகக் காத்திருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள் என்று கூறியுள்ள அவிசாவளை மாவட்ட பொது மருத்துவமனையின் மருத்துவர் ஒருவர், தான் தினமும் காணும் அவலங்களையும் கூறி எச்சரிக்கைசெய்து பதிவிட்டுள்ளார்.**

அவர் தனது பதிவில் குறிப்பிட்டுள்ளதாவது:

இந்த மருத்துவமனையில் கொவிட் 19 சிகிச்சை விடுதி தொடங்கப்பட்ட நாளிலிருந்து பணிபுரிந்து வருகிறேன். மருத்துவர்களாக நாங்கள் பன்னிரண்டு கொவிட்19 நோயாளர் விடுதிகளில் கடமையாற்றுக்கின்றோம். இப்போது அவை நிரம்பிவிட்டன. தினமும் சுமார் 100 கொவிட்19 நோயாளிகள் நாற்காலிகள் மற்றும் தரையில் இருந்தவாறு சிகிச்சை பெறுகிறார்கள்.

'வேலை தொடர்பான மன அழுத்தம்' பற்றிக் கேட்ட மற்றும் படித்த பிறகு, அது உண்மையில் எப்படி இருக்கிறது என்பதை இப்போது உணர்கிறேன். 'ஒட்சிசன் தீர்ந்து விட்டது' என்ற உணர்வு. இதுவரை வந்த கொவிட்-19 நோயாளிகளின் எண்ணிக்கை, அவர்கள் சிரமப்படும் விதம், ஒட்சிசன் கொடுக்கப்பட வேண்டிய நோயாளிகளின் எண்ணிக்கை, சிரமப்படும் நோயாளிகளின் வயது நிலைகள், இவை அனைத்தும் ஒரே வாரத்தில் மாறின. இது ஒரு பெரிய வித்தியாசம். விடுதியில் அனுமதிக்கப்பட்ட நோயாளிகளின் எண்ணிக்கை மூன்று மடங்குக்கும் அதிகமாக உள்ளது. முன்பைவிட தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் நோயாளிகள் அனுமதிக்கப்படும் சூழ்நிலையில், 70 - 80 வயதுடைய பெற்றோர்களுக்குச் சிகிச்சையளிப்பது கொஞ்சம் கடினமாக இருந்தது.

இப்போது அது முப்பது மற்றும் நாற்பது வயதுடையவர்களுக்கு கடினமாக உள்ளது. இன்னும், ஒட்சிசன் வழங்கல் இயந்திரங்கள் அதிகபட்சமாக இருந்தும்கூட பொதுமக்கள் இறப்பதற்காகக் காத்திருக்கிறார்கள் என்பதை நினைவில் கொள்ளுங்கள்!

நாற்பது வயதில் ஒரு தாய் தன் மகளுக்கு முன்னால் மூச்சுத் திணறலால் இறந்தார். சிபிஏபி என்ற இயந்திரத்தில் இணைக்கப்பட்டிருப்பதால், பேசுவதில் சிரமம் உள்ள மனைவி, தன் கணவருடன் கைகோர்த்து கண்களால் விடைபெற்றார். 27 வயதான கணவர், அவரது மனைவி இரட்டைக் குழந்தைகள் பிறப்புக்குத் தயாராகிகொண்டிருந்தபோது, ஒன்றும் செய்ய இயலாது தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பப்பட்டார். இவை அனைத்தும் ஒரே நாளில் நடக்கும்போது நான் உணரும் விதம், உண்மையில் கடினத்தன்மை. அனைத்திலும் கடினமான பகுதி மக்கள் இறக்கும்போது, அவர்கள் மூச்சுவிடும்போது, "நம்மை நாமே காப்பாற்ற ஏதாவது செய்யப் போகிறோமா?" என்ற நிலை.

கடந்த இரண்டு நாள்களில் நிகழ்ந்த இறப்புகளின் எண்ணிக்கை நான்கு முதல் ஐந்து வரையாக உயர்ந்துவிட்டது. இந்த விகிதத்தில் இன்னும் இரண்டு வாரங்களுக்கு நோயாளிகளின் எண்ணிக்கை அதிகரித்தால், ஒட்சிசன் இல்லாததால் மக்கள் நாற்காலிகளிலும், தரையிலும் முற்றத்திலும் இறந்துவிடுவார்கள். இவற்றையெல்லாம் பார்த்துவிட்டு நேற்றுமாலை (நேற்றுமுன்தினம்) நான் வீட்டுக்கு வந்தபோது, கெஹலிய ரம்புக்வெல்லவின் கதையை பார்த்தேன். "எதுவாக இருந்தாலும், நாடு மூடப்படாது, தடுப்பூசி போடப்பட்டு வாழ்க்கை கடவுளிடம் ஒப்படைக்கப்படும்."என்று தெரிவித்திருந்தார். இந்தப் பதிவை இங்கே நிறுத்துகின்றேன். ஏனென்றால், எனக்குத் தடையற்ற மொழியில் எழுதத் தெரியாது - என்றுள்ளது. (த-இ)

# மூன்று வாரங்களுக்கு நாட்டை முடக்குங்கள்

### தாமதிக்க வேண்டாம் என்றும் மருத்துவர்கள், சுகாதார தரப்பு அவசர கோரிக்கை

கொழும்பு, ஓக. 16

நாட்டில் தற்போது பரவிவரும் டெல்டா வைரஸ் தொற்று தாக்கத்தை குறைத்து மதிப்பிட வேண்டாம். நடைமுறைப்படுத்தப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் போதுமானதல்ல. எனவே உடன் நடைமுறைக்குவரும் வகையில் குறைந்தது மூன்று வாரங்களுக்கு 'லொக்டவுன்' ஒன்றுக்கு செல்லுமாறு மருத்துவ நிபுணர்கள் மற்றும் சுகாதார தரப்பினர் அரசிடம் வலியுறுத்தியுள்ளனர்.

முழுமையான வலியுறுத்தல்கள் அடங்கிய ஆவணங்களை மருத்துவ நிபுணர்கள் மற்றும் சுகாதார தரப்பினர் சுகாதார அமைச்சுக்கு வழங்கியுள்ளனர். கொவிட் வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதை நோக்காகக்கொண்டு நடைமுறைப்படுத்தப்படும் தற்போதுள்ள பயணக் கட்டுப்பாடுகள் பயனுள்ளதாக அமையாது. எனவே மேலும் கடுமையானதாக்கப்பட வேண்டும். அதாவது முழு முடக்கத்துக்கு செல்லவேண்டும். குறைந்தது 3 வாரங்களுக்கு மேல் முடக்கம் அமைய வேண்டும். அவ்வாறு அல்லாது தொற்றை கட்டுப்படுத்த இயலாது. கொவிட் தொற்றாளர்களின் எண்ணிக்கை மற்றும் கொவிட் தொற்றால் உயிரிழப்பவர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துள்ளது. அதனை கட்டுப்படுத்துவதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகள் மற்றும் ஏனைய முடக்க நடவடிக்கைகள் குறித்து காலம் தாமதிக்காது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இரு கட்ட தடுப்பூசிகள் வழங்கும் பணிகள் இன்னும் நிறைவடையவில்லை. அந்தப் பணிகள் முழுமையடைய இன்னும் குறைந்தது இரு மாதங்களேனும் செல்லும். அவ்வாறிருக்கையில் பயனற்ற கட்டுப்பாடுகளால் ஆபத்து மிக அதிகமாகும். எனவே அரசு தாமதப்படுத்தாது முழு முடக்கத்துக்குச் செல்ல வேண்டும் என வலியுறுத்தியுள்ளனர். (த-இ)

*நேற்றுமுன்தினம் மட்டும்*

# 65,695 பேருக்கு போடப்பட்டது சைனோபார்ம் தடுப்பூசி

கொழும்பு,ஓக.16

சைனோபார்ம் தடுப்பூசியின் முதலாவது டோஸ் 65 ஆயிரத்து 695 பேருக்கு நேற்றுமுன்தினம் போடப்பட்டது என்று சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு தெரிவித்துள்ளது.

தொற்று நோயியல் பிரிவு வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் உள்ளதாவது,

சைனோபார்ம் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் நேற்றுமுன்தினம் 2 லட்சத்து 17 ஆயிரத்து 712 பேருக்கு போடப்பட்டுள்ளது.

இதேவேளை, இதுவரை 8 லட்சத்து 71 ஆயிரத்து 432 பேருக்கு கொவிசீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

அத்துடன் இதுவரை ஒரு லட்சத்து 59 ஆயிரத்து 81பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

மேலும் 14 ஆயிரத்து 517 பேருக்கு ஸ்புட்னிக் வி தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் போடப்பட்டுள்ளது.

அதேபோல், இதுவரை 2 லாட்சத்து 52 ஆயிரத்து 229 பேருக்கு ஃபைசர் தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ள நிலையில், 7 லட்சத்து 65 ஆயிரத்து 441 பேருக்கு மொடர்னா தடுப்பூசியின் முதலாவது டோஸ் போடப்பட்டுள்ளது. என்றுள்ளது. (ஐ-இ)

# தடுப்பூசி பெற வந்தோருக்கு பால்த் தேநீர் வழங்கப்பட்டது

கிளிநொச்சி, ஓக. 16

பளை பிரதேசத்தில் தடுப்பூசிகளை பெறவந்த மக்களுக்கு பளை மருத்துவமனையின் நோயாளர் நலன்புரிச் சங்கத்தினர் பால்த் தேநீர் வழங்கினர்.

பளைப் பிரதேத்தில் கொவிட் 19 தடுப்பூசி கடந்த இரு வாரங்களுக்கு மேலாக வழங்கப்பட்டு வருகின்றது. பளையைச் சேர்ந்தவரும் தற்போது லண்டனில் வசித்துவருபவருமான நடேசபிள்ளை காந்தரூபன், பளை நோயாளர் நலன்புரிச் சங்கத்தின் ஊடாக நிதி உதவி வழங்கியிருந்தார். அந்தநிதி மூலமாக கொவிட் 19 தடுப்பூசிகளை பெறவந்த மக்களுக்கு பால்த் தேநீர் வழங்கப்பட்டது. (த-6)

# நான்கு மருத்துவமனைகளுக்கு ஒட்சிசன் கருவிகள் கையளிப்பு

கொழும்பு,ஓக.16

அவசர நிலைமைகளின் போது பயன்படுத்துவதற்காக நான்கு மருத்துவமனைகளுக்கு 16 ஒட்சிசன் செறிவூட்டும் கருவிகள் இராணுவத்தினரால் அண்மையில் வழங்கப்பட்டன.

கொழும்பு தேசிய மருத்துவமனை, களுபோவில போதனா மருத்துவமனை, ராகம போதனா மருத்துவமனை மற்றும் கம்பஹா ஆதார மருத்துவமனை ஆகியவற்றுக்கே குறித்த கருவிகள் வழங்கப்பட்டன. இந்த ஒட்சிசன் செறிவூட்டல் கருவிகளை இலங்கை மின் மற்றும் இயந்திர பொறியியல் படைப்பிரிவின் தளபதி பிரிகேடியர் ஓ.எம்.டி குணசிங்க மருத்துவமனைகளின் அதிகாரிகளிடம் கையளித்தார். (ஐ-இ)

# தற்போதைய கட்டுப்பாடுகள் கொவிட்டுக்கு தாக்குப்பிடிக்காது

## கடுமையான முடிவுகள் வேண்டுமென கூறுகின்றார் நாட்டின் பிரதமர் மஹிந்தர்

கொழும்பு, ஓக. 16

நாடு முழுவதும் ஏற்பட்டுள்ள கொரோனாத் தொற்றுக்கு தற்போதுள்ள கட்டுப்பாடுகளுக்கு அப்பாற் சென்று கடுமையான முடிவுகள் எடுக்கப்படவேண்டுமென பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்துள்ளார். கொரோனா தொற்று நோய் இருந்த போதிலும் சிலர் தங்களது சுகாதார வழிமுறைகளை புறக்கணித்து வருகின்றனர். பொதுமக்களின் இந்த செயற்பாடு பயனற்றது என்றும் பிரதமர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார்.

இதன்படி, இன்றும் நாளையும் கடுமையான முடிவுகள் எடுக்கப்படும் என்றும், நாட்டு மக்களின் உயிர்களை காப்பாற்ற அரசு பல வழிகளிலும் முயற்சிகளை மேற்கொள்ளும் என்றும் பிரதமர் தெரிவித்துள்ளார். எனினும், பொதுமக்களின் ஆதரவின்றி கொரோனாத் தொற்றை கட்டுப்படுத்த முடியாது எனவும் பிரதமர் மஹிந்த ராஜபக்ச சுட்டிக்காட்டினார். தற்போது கொரோனாத் தடுப்பூசி செலுத்தப்பட்டு வருகின்றது. முதலாவது மற்றும் இரண்டாவது தடுப்பூசி செலுத்தும் பணிகள் நிறைவடைந்தவுடன் தேவைப்பட்டால் உலக சுகாதார அமைப்பின்



அறிவுறுத்தல்களுக்கு அமைவாக மூன்றாவது தடுப்பூசிகளை செலுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தென்மராட்சி பிரதேச மக்கள் தடுப்பூசி பெற ஆர்வமில்லை

## சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவு தெரிவிப்பு

சாவகச்சேரி, ஓக. 16

**தென்மராட்சி பிரதேச மக்கள் தடுப்பூசி ஏற்றிக் கொள்வதில் அக்கறை காட்டவில்லை. இதனால் பிரதேசத்தில் கொரோனாத் தொற்று தீவிர மடையலாம் என்று தெரிவிக்கப்படுகின்றது.**



பிரதேசத்தில் திடீரென கொரோனாத் தொற்று அதிகரித்து வருகின்றமை தொடர்பில் பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவில் கேட்டபோது, அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:

இந்தப் பகுதி பொதுமக்களை கொரோனாவிலிருந்து பாதுகாக்க பணியக அலுவலர்கள் இரவு பகல் பாராது பணியாற்றி வருகின்றனர். மக்கள் கொரோனாவின் தாக்கம் பற்றிய விழிப்புணர்வு இல்லாத நிலையில் முகக்கவசம் அணியாமலும், தனியாள் இடைவெளி பேணாமலும் நடமாடுகின்றனர். அத்துடன் கோவில் மற்றும் வீடுகளில் இடம்பெறும் நிகழ்வுகளில் தாராளமாக கலந்துகொள்கின்றனர். கோவில்கள் மற்றும் வீடுகளில் நடைபெறும் நிகழ்வுகளை இயலுமானவரை தவிர்த்துக் கொள்ளுமாறு அறிவிக்கப்படுகின்ற நிலையில், மக்கள் அதற்கு மாறாகவே செயற்படுகின்றனர்.

இங்குள்ள மக்களில் 50 வீதமானவர்கள் தடுப்பூசி பெற்றுக் கொள்வதில் அக்கறை காட்டவில்லை .இதன் விளைவாகவே அடுத்த மாதம் தொடக்கம் தடுப்பூசி ஏற்றியமைக்கான அட்டை வைத்திருப்பவர்கள் மட்டும் வெளியில் நடமாடமுடியும் என்ற நிலை உருவாகியுள்ளது.

அடுத்துவரும் தினங்களில் இருகட்ட தடுப்பூசி ஏற்றியவர்கள் மட்டுமே தமது தேவைகளுக்கு வெளியில் செல்லமுடியும் என்ற நிலை வரலாம். இதனால் பலர் வீடுகளுக்குள் முடங்கி அடுத்தவரை உதவிக்கு கோரும் நிலை ஏற்படலாம்.

பிரதேசத்தில் எந்தவொரு நிகழ்வையும் நடத்த முன்னர் சுகாதாரப் பகுதியினரின் அனுமதி பெற வேண்டும் என அறிவிக்கப்பட்டுள்ள போதிலும், சிலர் அழைப்பிதழ்களை அச்சிட்டு உறவினர்களுக்கு விநியோகித்து பெரும் எடுப்பில் நிகழ்வுகளை நடத்துகின்றனர். இவ்வாறான செயற்பாடுகள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம். தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்களும் கொரோனாத் தொற்றுக்கு இலக்கானவர்களும் நிகழ்வில் பங்குபற்றுகின்றமையால் தொற்று விரைவாக மற்றவர்களுக்கு பரவும் அபாயம் காணப்படுகிறது.

எனவே, மக்கள் தாமாகவே உணர்ந்து தடுப்பூசிகளை ஏற்ற முன்வரவேண்டும்.

கோவில் நிகழ்வுகளிலும் வீடுகளில் இடம்பெறும் நிகழ்வுகளிலும் கலந்துகொள்வதை தவிர்த்துக் கொள்வதன் மூலமாக பிரதேச மக்கள் தொற்றிலிருந்து பாதுகாத்துக் கொள்ள முடியும் - என்று தெரிவித்தனர். (த-9)

# சுமந்திரனை கட்டுப்படுத்தத் தவறின் மாவை இராஜினாமாச் செய்ய வேண்டும்

## காணாமல் ஆக்கப்பட்டோரை தேடும் உறவுகள் வலியுறுத்து

வவுனியா, ஓக. 16

தமிழர்களின் அரசியல் எதிர்காலம் தொடர்பாக நாடாளுமன்ற உறுப்பினர் சுமந்திரன் பிறருடன் பேசுவதை மாவை சேனாதிராசா கட்டுப்படுத்த வேண்டும். இல்லாவிடில் மாவை சேனாதிராசா ராஜினாமா செய்யவேண்டும்.

இவ்வாறு வலியுறுத்தியுள்ளனர், வவுனியாவில் 1640 ஆவது நாளாக தொடர்போராட்டம் மேற்கொள்ளும் காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள்.

செஞ்சோலை சிறுவர் இல்லத்தில் 54 மாணவிகள் படுகொலை செய்யப்பட்டதன் 15 ஆவது ஆண்டு நினைவுதினம் காணாமல் போனவர்களின் உறவினர்களால் வவுனியாவில் கடைப்பிடிக்கப்பட்டது.

அதன்பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும் போது அவர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர். எதிர்காலத்தில் இந்தப் படுகொலைகளை எப்படி நிறுத்துவது என்பதுதான் முக்கியமான விடயம்.

எங்கள் அரசியல் தலைவர்கள் சிங்களவர் தட்டில் வைக்கும் சலுகைகளுக்காக வேலைசெய்கின்றமையை விட்டு, தமிழர்களை சரியாக வழிநடத்த வேண்டும்.

செப்ரெம்பரில் ஜெனிவா கூட்டம் நடைபெறவுள்ள நிலையில், இலங்கையில் சிங்கள புத்தி ஜீவிகளை, அரசியல்வாதிகளை சுமந்திரன் தனியாகச் சென்று சந்திக்கின்றார் என்பது அபாயமானது. கட்சி அனுமதி இல்லாமல் அவரால் தனியாக செயற்பட முடியாது. இங்கே எதையும் மறைக்க ராஜதந்திரம் தேவையில்லை. எல்லாவற்றுக்கும் மேலாக, 74 வருடங்கள் அனுபவத்தில் சிங்களத்துடன் பேசுவது பயனற்றது என்பது வரலாறு.

மாவை அவரது முந்தைய கட்சித் தலைவர் தந்தை செல்வாபோல் நடந்து கொள்ள வேண்டும். அவரால் முடியாவிட்டால், அவர் தலைமையை ராஜினாமா செய்து கட்சியை கட்டுப்படுத்தக்கூடிய ஒருவருக்கு கொடுக்க வேண்டும்.

காணாமல் ஆக்கப்பட்ட தமிழ் தாய்மார்கள் நாங்கள், சுமந்திரனை நம்பவில்லை. 2017 பெப்ரவரி 09 இல், பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன எங்களை அழைத்தார். சுமந்திரன் எங்கள் சந்திப்புக்கு வந்து பாதுகாப்பு இராஜாங்க அமைச்சருடனான எங்கள் சந்திப்பை குழப்பி விட்டார். இதுவே சுமந்திரனின் இயல்பாகும்.

சுமந்திரன் தமிழர்களை விரும்பாத நபர். தமிழர்களிடையே வாழ்வது தனக்கு அவமானம் என்று சொன்னவர்.

தமிழர் தாயகத்தில் சிங்களவர் வாழ வேண்டும் என்று விரும்பியவர்தான் சுமந்திரன். அதை நிரூபிக்க அவர் நல்லாட்சி என்று அழைக்கப்பட்ட காலத்தில் வவுனியா, நெடுங்கேணியில் சிங்கள குடும்பங்களுக்கு 4 ஆயிரம் ஏக்கர் காணி உறுதிப்பத்திரங்களை மைத்திரியுடன் சேர்ந்து வழங்கினார் . சுமந்திரன் வடக்கு கிழக்கு இணைப்பை விரும்பாதவர். கிழக்கு மாகாண சபை அதிகாரத்தை முஸ்லிம்களுக்கு (7 அங்கத்தவர்கள்) வழங்கினார். அங்கு அப்போது தமிழர்கள் (13 அங்கத்தவர்கள்) பெரும்பான்மையாக இருந்தனர். சுமந்திரன் மற்ற மதங்களை விரும்பியதில்லை. நாடாளுமன்றத்தில் பௌத்தத்துக்கு முதலிடம் கொடுத்தார். சர்வதேச விசாரணை முடிந்துவிட்டது என்று சொன்னவர், இப்போது தமிழர்களுக்கு உள்நாட்டு தீர்ப்பை வழங்க வேண்டும் என்கிறார். முள்ளிவாய்க்காலில் இறந்த தமிழர்களை அவர் எவ்வளவு வெறுக்கிறார் என்பதை இது காட்டுகிறது.

ரணிலின் நல்லாட்சியின்போது சுமந்திரன் எங்களிடம் கூறியதை நாம் நினைவூட்ட விரும்புகிறோம். நல்லாட்சி முடிவில் புதிய அரசமைப்பு வருகிறதோ இல்லையோ தான் அரசியலிலிருந்து விலகுவேன் என்று கூறியிருந்தார். தனது ராஜினாமா கடிதத்தில் 75 வீதத்தை பூர்த்தி செய்துள்ளேன் என்றும் கூறினார். அவர் நம்பக்கூடிய நபர் அல்ல என்பதை இது காட்டுகிறது - என்றனர். (த-110)




# அஞ்சலகங்களின் சேவைகளை 3 நாளாகக் குறைத்ததால் பாதிப்பு


## பொதுமக்கள் சுட்டிக்காட்டுகின்றனர்

சாவகச்சேரி, ஓக. 16

சாவகச்சேரி அஞ்சல் அலுவலகம் மற்றும் அதனுடன் இணைந்த உப அஞ்சல் அலுவலகங்கள் வாரத்தில் புதன் மற்றும் வெள்ளிக்கிழமைகளில் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளதால், இவை மூலமாக தேவைகளைப் பெற்று வந்த பொதுமக்கள் சிரமங்களை எதிர்நோக்குகின்றனர்.

முத்திரை, பதிவு அஞ்சல், பொதுசன மாதாந்த உதவிப்பணம், நோயாளர் மற்றும் முதியோர் கொடுப்பனவு போன்றவற்றுக்கும் பட்டியல் கட்டணம் செலுத்துவதற்கும் மக்கள் அஞ்சல் அலுவலகங்களுக்குச் செல்கின்றனர்.

அஞ்சல் சேவை அத்தியாவசிய சேவைகளுள் ஒன்றாக காணப்படுவதால் அங்கு பணிபுரியும், அலுவலர்களின் தொகைக்கேற்ப அஞ்சல் அலுவலகங்களை சுழற்சி முறையில் செயற்பட வைக்கலாம். சில செயற்பாடுகளை நிறுத்தினாலும் முத்திரை விநியோகம், பதிவு அஞ்சல் பொறுப்பேற்றல் போன்றவற்றை மேற்கொள்ளலாம். மாதாந்த உதவிப் பணம் மற்றும் முதியோர் கொடுப்பனவு, நோயாளர்களுக்கான கொடுப்பனவு போன்றவற்றைப் பெற்றுகொள்ளவரும் பொருண்மியம் குறைந்த மக்களின், நலனுக்காகவாவது அஞ்சல் அலுவலகங்களை தினமும் திறக்க நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று மக்கள் எதிர்பார்க்கின்றனர். (த-9)



# டிப்பர் வாகனம் குடைசாய்ந்து விபத்து

கிளிநொச்சி, ஓக. 16

கிளிநொச்சி பளை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட ஆனையிறவு பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற விபத்தில் டிப்பர் வாகனம் ஒன்று குடை சாய்ந்தது.

யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கப்ரக வாகனத்தின் மீது கிளிநொச்சி நோக்கிச் சென்று கொண்டிருந்த டிப்பர் வாகனம் மோதியது. இதன்போது டிப்பர் வாகனம் வீதியை விட்டு விலகி குடைசாய்ந்த போதும் சாரதி காயங்களுடன் உயிர் தப்பியுள்ளார்.

விபத்து தொடர்பான விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-214)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெவ்வேறு நோய்கள் என்று கூறி தடுப்பூசியை தவிர்க்க வேண்டாம்!

## பொதுமருத்துவ நிபுணர் பேரானந்தராஜா ஆலோசனை

யாழ்ப்பாணம், ஓக. 16

சிலர் வெவ்வேறு வருத்தங்கள் இருக்கின்றன என்றுகூறி தடுப்பூசிகளை போட்டுக்கொள்ள மறுக்கின்றார்கள். ஆனால், அவ்வாறானவர்கள்தான் கட்டாயம் தடுப்பூசியைப் போட்டுக் கொள்ளவேண்டும் என்று பொது மருத்துவ நிபுணர் தம்பிப்பிள்ளை பேரானந்தராஜா தெரிவித்தார்.

யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கொரோனா தொடர்பான விழிப்புணர்வு ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

உலகளாவிய ரீதியில் கொரோனா தாக்கம் அதிகரித்துள்ளது. மக்கள் கவனமாக இருந்து கொரோனாவின் தாக்கத்தைக் குறைப்பதற்கு முன்னின்று உழைக்க வேண்டும்.

யாழ்ப்பாண மாவட்டத்தில் இதுவரை 8 ஆயிரம் தொற்றாளர்களும் 176 உயிரிழப்புகளும் உறுதிப்படுத்தப்பட்டுள்ளன.

நோயை எதிர்கொள்ள இரண்டு வகையான வழிகள் இருக்கின்றன.

ஒன்று நோய்த்தொற்று வராமல் தடுப்பது, மற்றையது தொற்று வந்ததன் பின்பு மருத்துவமனை சிகிச்சை முறை.

30 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இலங்கையில் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்று சுகாதார அமைச்சு கூறியுள்ளது.

இதனைக் கட்டாயம் அனைவரும் பெற்றுக்கொள்ள வேண்டும்.

சிலர் வெவ்வேறு வருத்தங்கள் இருக்கின்றன என்றுகூறி தடுப்பூசிகளை பெற்றுக்கொள்ள மறுக்கின்றார்கள். ஆனால் அவ்வாறானவர்கள்தான் கட்டாயம் தடுப்பூசியைப் போட்டுக் கொள்ள வேண்டும்.


ஒவ்வாமை சம்பந்தமான பிரச்சினைகள் இருந்தால் தடுப்பூசி போடச் செல்லும்போது அங்குள்ள மருத்துவர்களுடன் கதைத்தால் அதற்குரிய நடவடிக்கையை அவர்கள் எடுப்பார்கள்.

மக்கள் ஒரே இடத்தில் ஒன்று கூடுவதை தவிர்க்க வேண்டும். திருவிழாக்கள், கொண்டாட்டங்கள், இறப்புச் சடங்குகள் போன்ற சந்தர்ப்பங்களில் ஒரே நேரத்தில் பல பேர் கூடுகின்றமையால் ஒருவருடைய உடலிலிருந்து நோய் இன்னொருவருக்கு தாக்கக்கூடிய சந்தர்ப்பங்கள் அதிகமாக இருக்கின்றன. ஆகவே தேவையற்ற விதத்தில் ஒன்றுகூடலை தவிர்ப்பது சிறப்பானது.

மூக்கையும் வாயையும் மூடிய வகையில் சரியாக முகக் கவசங்களை அணியவேண்டும். கதைக்கும்போது முகக் கவசங்களை கழற்றாமல் கதைக்க வேண்டும். வெளியில் சென்று வந்தால் கைகளை சவர்க்காரம் போட்டு கழுவுதல் சிறப்பானது. இருவருக்கிடையில் இரண்டு மீற்றர் இடைவெளியை அனைவரும் பின்பற்றவேண்டும். கை கொடுத்தல், கட்டியணைத்தல் போன்றவற்றைத் தவிர்க்க வேண்டும். முடிந்தளவுக்கு வீட்டிலிருந்தபடி உங்கள் வேலைகளை செய்வதற்குப் பழகுங்கள்.

உங்களுக்கு நோய்த்தன்மை காணப்படும்பொழுது மருத்துவமனைக்கு உடனடியாகச் சென்றால் அவற்றைத் தவிர்க்க முடியும் - என்றார். (த-26)

# போலி நாணயத்தாள்கள் வைத்திருந்த இருவர் கைது



கொழும்பு.ஓக.16

போலிய நாணயத்தாள்கள் மற்றும் அவற்றை அச்சிட பயன்படுத்தும் இயந்திரம் ஆகியவற்றை வைத்திருந்த குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டனர்.

கிராண்ட்பாஸ் பொலிஸாருக்கு கிடைத்த தகவலுக்கு அமைவாகவே இந்த கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேக நபர்களிடமிருந்து போலி 100 ரூபா நாணயத்தாள்கள் 25, ஐநூறு ரூபா நாணயத்தாள்கள் 18 மற்றும் ஆயிரம் ரூபா போலி நாணயத்தாள் ஒன்றும் கைப்பற்றப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹன தெரிவித்துள்ளார்.

இதேவேளை போலி நாணயத்தாள்களை வடிவமைக்க மற்றும் அச்சிடப் பயன்படுத்தப்பட்ட மடிக்கணினி, இயந்திரம் போன்றவற்றையும் பொலிஸார் கைப்பற்றினர். (ஐ-இ)

# சமூகத்தில் நாளாந்தம் சுமார் 30 ஆயிரம் தொற்றாளர்கள்

## மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவிப்பு



**கொழும்பு,ஓக.16**

**பரிசோதனைகளில் வெளிப்படுத்தப்படவில்லை என்றாலும் சமூகத்தில் நாளாந்தம் சுமார் 30 ஆயிரம் பேர் வரையில் கொரோனா தொற்றுக்கு உள்ளாகின்றனர் என்று ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழக மருத்துவ பீடத்தின் ஒவ்வாமை, நோயெதிர்ப்பு மற்றும் மூலக்கூற்று உயிரியல் பிரிவின் தலைவர் மருத்துவர் சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.**

இதுவரை பெறப்பட்ட தகவல்களின் அடிப்படையில் இந்த முடிவு எடுக்கப்பட்டது என்று அவர் மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, சமூகத்தில் அறிவிக்கப்பட்ட எண்ணிக்கையை விட அதிகமாக பாதிக்கப்பட்டவர்கள் இருக்கலாம் என்று சுகாதார அமைச்சின் சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் ஹேமந்த ஹேரத் அண்மையில் கூறியிருந்தார்.

தற்போது, நாளாந்தம் 2 ஆயிரம் முதல் 3 ஆயிரம் பேர் மட்டுமே தொற்றுக்குள்ளாகின்றனர் என்று சுகாதாரப் பிரிவினால் அறிக்கையிடப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ-இ)

# மாணவர்கள் மூவர் நீரில் மூழ்கி பரிதாபச் சாவு



கொழும்பு, ஓக். 16

மொனராகலை, புத்தல கடுகஹ கல்கே வாவியில் நீராடச் சென்ற மூன்று மாணவர்கள் நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இடம்பெற்றதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

உயர்தரத்தில் கல்வி பயிலும் மூன்று மாணவர்களே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

உயிரிழந்த மூவரின் சடலங்களும் நேற்றுக் காலை கண்டெடுக்கப்பட்டுள்ளன.

இந்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை புத்தல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஒ.இ)

# 109 பேர் கைது



கொழும்பு.ஓக.16

சுகாதார அமைச்சால் பிறப்பிக்கப்பட்ட தனிமைப்படுத்தல் உத்தரவுகளை மீறிய குற்றச்சாட்டில் 109 பேர் கைது செய்யப்பட்டனர்.

நேற்றுக் காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணிநேரப் பகுதியிலேயே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர்.

கடந்த ஒக்ரோபர் 30 ஆம் திகதி தொடக்கம் இதுவரையான காலப் பகுதியில் மொத்தம் 54 ஆயிரத்து 359 பேர் தனிமைப்படுத்தல் உத்தரவை மீறிய குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேல் மாகாண எல்லையில் பயணக் கட்டுப்பாடுகளை மீறி கடக்க முற்பட்ட 582 பேர் கடுமையாக எச்சரிக்கப்பட்டு திருப்பி அனுப்பப்பட்டனர்.

தொற்றுநோய் பரவுவதைத் தடுக்க விதிக்கப்பட்ட சட்டத்தை மீற வேண்டாம் என்று பொதுமக்களைக் கேட்டுக் கொள்ளும் பொலிஸார், தனிமைப்படுத்தல் விதிமுறைகள் தொடர்பான நடவடிக்கைகள் தொடரும் என்றும் தெரிவித்தனர். (ஐ-இ)

# குறுகிய காலத்துக்கேனும் நாட்டை முடக்குங்கள்

## எதிர்க் கட்சி வலியுறுத்து



கொழும்பு.ஓக.16

அனைத்தையும் விட மக்களின் உயிர் பெறுமதியானது என்பதால், நிபுணர்களின் ஆலோசனையை கருத்திற்கொண்டு, குறுகிய காலத்திற்கேனும் நாட்டை முடக்குங்கள் என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச அரசாங்கத்தை வலியுறுத்தியுள்ளார்.

அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டதாவது,

நாளாந்தம் ஐயாயிரத்துக்கும் அதிகமானோருக்கு தொற்று உறுதி செய்யப்படுவதுடன், 250 இற்கும் அதிகமான உயிரிழப்புகள் பதிவாகி வருகின்ற நிலையில் மருத்துவமனைகளில் இருந்து உத்தியோகபூர்வமற்ற தகவல்கள் கிடைப்பதாக அரச மருத்துவ அதிகாரிகள் சங்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

கொரோனா தொற்று முதலில் அடையாளம் காணப்பட்டபோது நாட்டு மக்கள் பொறுப்புடன் செயற்பட்டவேளை, அரசாங்கமே பொறுப்பின்றி செயற்பட்டது.

அரசாங்கம் உயிர்களுடன் விளையாடுவதுடன், இறுதியில் பேரவலம் ஏற்படும் என்பதை விரைவில் புரிந்துகொள்ள முடிகிறது - என்றுள்ளது. (ஐ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## பொதுமுடக்கமும் வீம்புத்தனமும்

''வரும். ஆனால் வராது''

இது வடிவேலுவின் நகைச்சுவைகளில் அதிகம் ரசிக்கப்பட்ட பிரபலமான வசனம். இலங்கையில் பொதுமுடக்கம் பற்றிய கணிப்புகளும் 'வரும் ஆனால் வராது' என்கிற பாணியிலேயே இருக்கின்றன. நாட்டில் கொரோனாத்தொற்று வேகமும், சடுதியாக உயர்ந்து செல்லும் சாவுகளின் எண்ணிக்கையும் முடக்கத்தை தவிர வேறுவழியேதும் இல்லை என்று உரத்துச் சொன்னாலும் அதைக் கேட்கும் மனோநிலையில் இலங்கை அரசாங்கம் இல்லை.

இராணுவத்தனமான சிந்தனையோடுதான் அரசாங்கம் கொரோனாப் பெருந்தொற்றை அணுகுகின்றதே தவிர விஞ்ஞான பூர்வமாக எவ்வித நடவடிக்கையும் எடுப்பதாக இல்லை. அதற்கு முக்கியமாக இரு காரணிகளைச் சொல்லலாம். ஒன்று, நாட்டின் ஜனாதிபதியும், கொரோனா தடுப்புச் செயலணியின் தலைவரும் இராணுவச் சிந்தனை வயப்பட்டவர்கள். இரண்டாவது, அசாதாரணமாகச் சரிந்து கொண்டே செல்லும் பொருளாதாரநிலைமை. இவ்விரு காரணிகளுமே கொரோனாப் பெருந்தொற்றைத் தடுப்பதற்கான பொதுமுடக்கத்தை இலங்கை தவிர்ப்பதற்கான காரணிகள்.

கொரோனாவின் முதலாவது அலையை. மிக இலாவகமாகக் கையாண்டு, உலகில் கொரோனாவைச் சிறப்பாகக் கட்டுப்படுத்திய நாடுகளின் பட்டியலில் இலங்கையும் இடம்பிடித்துக் கொண்டது. அதிர்ஷ்டமோ என்னவோ, முதலாவது அலையைக் கட்டுப்படுத்த இலங்கையின் இராணுவரீதியிலான தடுப்பு நடவடிக்கைகள் கைகொடுத்தன. ஆனால், அது வெறும் தற்காலிக வெற்றியே என்பதை அடுத்து வந்த கொரோனாவின் பேரலைகள் உணரவைத்தன. முதலாவது அலையில் , தொற்றாளர்களின் எண்ணிக்கையும், பாதிப்பு வீதமும் குறைவாக இருந்ததனால் அதனைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வருவதும் சுலபமாக இருந்தது. குறிப்பாக முதல்நிலைத் தொற்றாளரோடு தொடர்புடைய இரண்டாம், மூன்றாம் சங்கிலித் தொடர்பில் உள்ளவர்கள் கூட முதலாவது அலையில் தனிமைப்படுத்தலுக்கு உள்ளாக்கப்பட்டனர். இதனால் புதிய கொரோனாக் கொத்தணிகள் உருவாவது தடுக்கப்பட்டது. ஆனால் இரண்டாம், மூன்றாம் கொரோனா அலைகளின் போது நடந்ததே வேறு.

நாட்டின் சகல பக்கங்களிலும் கொரோனாக் கொத்தணிகள் முளைத்தன. முதல்நிலைத் தொற்றாளர்களைக் கூட தனிமைப் படுத்தவோ அல்லது சிகிச்சையளிக்கவோ முடியாத நிலை உருவானது. நாட்டின் பல பிரதான மருத்துவமனைகளின் கொள்ளளவை விடவும், கொரோனாச் சிகிச்சையாளர்களின் எண்ணிக்கை பல்கிப் பெருகுகின்றது. கொரோனாவால் உயிரிழப்போரின் சடலங்களால் பிணவறைகள் நிறைந்து வழிகின்றன. ஒட்சிசனுக்கு பெரும் தட்டுப்பாடு. பி.சி.ஆர் பரிசோதனைகளை இயன்றவரை அரசாங்கம் குறைத்தும் கூட, நாளாந்தம் மூவாயிரத்துக்கும் அதிகமானோர் தொற்றாளர்களின் பட்டியலுக்குள் உள்வாங்கப்படுகின்றனர். சாவுகளோ தினம் தினம் அதிகரிக்கின்றனவே தவிர, குறைந்தபாடாயில்லை. இலங்கை அரசாங்கத்தின் கொரோனாத் தடுப்பு நடவடிக்கைகள் படுதோல்வியடைந்துவிட்டன என்பதையே தொற்றாளர்களினதும், சாவுகளினதும் எண்ணிக்கைகள் சொல்கின்றன. அப்படியிருந்தும் கூட தன் தோல்வியை ஒத்துக்கொள்ள மனமின்றி விடாப்பிடியாக நிற்கிறது அரசாங்கம். பொதுமுடக்கத்தை நடைமுறைப்படுத்தினால், அது தன் இயலாமையை, தோல்வியை ஒப்புக்கொண்டதாக அமைந்து விடுமென்றெண்ணியே , மாகாணப் பயணக் கட்டுப்பாட்டு, திருமணம் உள்ளிட்ட ஒன்றுகூடல் நிகழ்வுகளுக்கு தடை என்று ஏதேதோ சமாளிப்புகளை செய்துகொண்டிருக்கிறது. அத்தோடு, சரியான திட்டமிடலின்மையால் மிகப் பெரிய பொருளாதார நெருக்கடி நிலை, முடக்கத்தை நடைமுறைப்படுத்தினால் ஏற்படுமென அரசாங்கம் அஞ்சுகின்றது. இப்போதே பால்மா, எரிவாயு, மஞ்சள், சீனி, பருப்பு, அரிசி, ஒட்சிசன் சிலிண்டர்கள் என்று அத்தியாவசியப் பொருள்கள் எல்லாமே காணாமல் போகத் தொடங்கிவிட்டன. அரசாங்கம் முடக்கத்தைப் போடாவிட்டால் கூட மிகப்பெரிய பொருளாதார இழிநிலையை இலங்கை அடைவதை எவராலும் இனிமேல் தடுக்க முடியாது. எனவே பொருளாதாரச் சரிவு ஏற்படுமெனச் சாட்டுச் சொல்லி, முடக்கத்தை தள்ளிப்போடுவதை எவருமே ஏற்கமாட்டார்கள்.

எப்போதோ கொண்டுவர வேண்டிய முடக்கத்தை இனியும் தாமதப்படுத்தினால், நாளாந்த உயிரிழப்புகள் நூற்றுக்கணக்கில் பெருகும் என துறைசார்ந்த நிபுணர்களும், மருத்துவ சங்கங்களும் பெருங்குரலெடுத்து கதறுகின்றார்கள். ஆனால் இந்த அரசாங்கத்தைப் பொறுத்தவரை அவையெல்லாம் செவிடன் காதில் ஊதிய சங்குகளே. கடைசியில் நாட்டுக்கும், மக்களுக்கும் இந்த அரசாங்கம் சங்கு ஊதாமல் ஓய்ப்போவதில்லை.



## புதிய பிறழ்வை எதிர்கொள்ள இலங்கை தயாராக வேண்டும்

### இராஜாங்க அமைச்சர் கோரிக்கை

**கொழும்பு, ஓக. 16**



**இலங்கையில் புதிய வகையான கொரோனா வைரஸ் பிறழ்வு உருவாகக்கூடிய வாய்ப்பு உள்ளது. அதனை எதிர்கொள்வதற்குத் தயாராகவேண்டும் என்று இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன நேற்று தெரிவித்தார்.**

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

இலங்கையின் தற்போதைய நிலைமை மிகவும் அவதான மட்டத்திலேயே இருக்கின்றது. இதில் ஒளிப்பதற்கு ஒன்றுமில்லை. அதே போல அடுத்த இரு வாரங்கள் மிகவும் தீர்க்கமானவை. எனவே, மிகவும் அத்தியாவசிய காரணத்துக்காக அன்றி வீட்டைவிட்டு வெளியே செல்ல வேண்டாம் என மக்களிடம் கேட்டுக்கொள்கின்றோம். அவ்வாறு சென்றால் வைரஸ் தொற்று அபாயம் உள்ளது என்பதை மறந்துவிடக்கூடாது.

'டெல்டா' பிறழ்வு வேகமாக பரவக்கூடியது. சில நாடுகளில் 'டெல்டா' பிறழ்வு ஏற்பட்ட பின்னர் புதிய வகையான பிறழ்வு உருவானது. டெல்டா பிளஸ், லெம்டா போன்றன அவ்வாறுதான் உருவாகின. இலங்கையிலும் புதிய பிறழ்வு உருவாவதற்கான வாய்ப்பு உள்ளது. இதுவரை அவ்வாறு எதுவும் பதிவாகவில்லை. ஆனாலும் அதற்கான சாத்தியமும் இல்லாமல் இல்லை.

எனவே, புதிய பிறழ்வை எதிர்கொள்வதற்கும் நாம் தயாராக வேண்டும், என்றார்.

(ஒ.44)

## இலங்கையில் புதிய வைரஸ் திரிபு உருவாகுவதற்கு வாய்ப்பு

கொழும்பு, ஓக. 16

இலங்கையில் தற்போது பரவிவரும் வீரியம் கொண்ட டெல்டா திரிபை கட்டுப்படுத்த தவறும் பட்சத்தில், இலங்கைக்கு சொந்தமான புதிய கொவிட் வைரஸ் திரிபொன்று உருவாகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக விசேட மருத்துவ நிபுணர்கள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

ஓகஸ்ட் இறுதி வாரம் அல்லது செப்ரெம்பர் முதல் காலப்பகுதியில் இலங்கைக்குள் புதிய திரிபொன்று உருவாகும் அபாயம் காணப்படுவதாக மருந்து தொடர்பான சர்வதேச ஆலோசகர் மருத்துவர் சஞ்ஜய பெரேரா தெரிவித்துள்ளார்.

இதேவேளை, டெல்டா வைரஸ் மிக வேகமாக பரவி வருகின்றமையால் இலங்கைக்குள் புதிய வைரஸ் திரிபு உருவாவதற்கான சாத்தியம் காணப்படுவதாக இலங்கை மருத்துவ சங்கத்தின் தலைவர் மருத்துவர் பத்மா குணரத்ன குறிப்பிடுகின்றார்.

இவ்வாறு உருவாகும் வைரஸ், தற்போதுள்ள வைரஸை விடவும் வீரியம் கொண்டதாக அமையும் என அவர் எச்சரிக்கை விடுக்கின்றார். (ஒ.இ)

## பொதுமக்கள் மத்தியில் வேகமாகப் பரவும் வைரஸ்

### சுகாதார அமைச்சு தெரிவிப்பு

கொழும்பு.ஓக.16

பொதுமக்கள் மத்தியில் கொவிட் வைரஸ் வேகமாக பரவிவரும் தன்மை காணப்படுகின்றது என்று சுகாதார அமைச்சின் பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார்.


அவர் மேலும் தெரிவிக்கையில்,

நோய் அறிகுறிகள் காணப்படுவோரின் எண்ணிக்கை அதிகரித்து வருவதால், சிகிச்சை அளிக்கப்பட வேண்டிய நோயாளர்களின் எண்ணிக்கையும் அதிகரித்துள்ளது.

தொற்றுக்குள்ளாவோரின் எண்ணிக்கையை குறைக்க வேண்டுமாயின். தடுப்பூசி ஏற்றிக் கொள்ள வேண்டும்.

உயிரிழந்தவர்களில் பெரும்பாலானோர் தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதவர்களே - என்றார். (ஒ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## சைக்கிள் திருட்டில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் இருவர் கைது

யாழ்ப்பாணம், ஓக.16

சைக்கிள் திருட்டில் ஈடுபட்டுவந்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புப் பிரிவினரால் இருவர் கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் இந்து கல்லூரி, முனீஸ்வரன் ஆலயம், யாழ்ப்பாணம் நகரப்பகுதி மற்றும் கொக்குவில் போன்ற பிரதேசங்களில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த சைக்கிள்கள் குறித்த நபர்களால் கடந்த சில நாள்களாக திருடப்பட்டன என்று விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. சந்தேகநபர்கள் இருவரும் யாழ்ப்பாணம் சாவக்கட்டு பகுதியை சேர்ந்த 19, 20 வயதுடையவர்கள் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட 5 சைக்கிள்களும் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டன. எனினும் இது தொடர்பில் முறைப்பாடுகள் கிடைக்கப்பெறாததால் மேற்சொல்லப்பட்ட பகுதிகளில் துவிச்சக்கரவண்டிகளை தவறவிட்டவர்கள் யாழ்ப்பாண மாவட்ட குற்றத்தடுப்புபிரிவு பொலிஸாரை தொடர்பு கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-20)

### வவுனியா மருத்துவமனைக்கு

## ரூ.50 மில்லியன் பெறுமதியான உபகரணங்கள் வந்தடைந்தன

வவுனியா , ஓக. 16

வவுனியா மாவட்ட பொது மருத்துவமனைக்கு 50 மில்லியன் ரூபா பெறுமதியான உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. கொரொனாத் தொற்றை எதிர்கொள்ளும் வகையில் உயிர்காக்கும் உபகரணங்கள் உட்பட அதிதீவிர சிகிச்சை பிரிவுக்குத் தேவையான உபகரணங்களே மத்திய சுகாதார அமைச்சால் அண்மையில் வழங்கப்பட்டுள்ளன. மாவட்ட பொது மருத்துவமனையின் பணிப்பாளர் நேரில்சென்று விடுத்திருந்த வேண்டுகோளுக்கிணங்க மேற்படி உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

தீவிர கொரோனா நோயாளிகளுக்குத் தேவையான உயர்ஓட்டநாசி ஒட்சிசன் கருவிகள், நோயாளர் கண்காணிப்பு கருவி மற்றும் செயற்கை சுவாச கருவிகள் உட்பட பல கருவிகளும் உபகரணங்களும் வழங்கப்பட்டுள்ளன.

சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மற்றும் சுகாதார அமைச்சின் அறிவுறுத்தல்கள், சுற்றறிக்கைகளுக்கு அமைய கொரொனா நோயாளிகள் மற்றும் கொரோனா அல்லாத பிற நோயாளிகளுக்கான சேவை வழங்கல் சீரான முறையில் திட்டமிடப்பட்டுள்ளபோதும், சுகாதார ஊழியர்களின் வேலைப்பழு பலமடங்காக அதிகரித்துள்ளது என்று மருத்துவமனைப் பணிப்பாளர் தெரிவித்தார். (து-6)

# இலங்கையில் தொற்று மோசம் இந்தியாவில் இருந்து ஒட்சிசன்

கொழும்பு, ஓக. 16

**வைரஸ் தொற்றாளர்களின் திடீர் அதிகரிப்பால் இலங்கையில் மருத்துவக் கட்டமைப்புகள் பெரும் நெருக்கடியை எதிர்கொண்டுள்ளன. அடுத்து வரும் சில வாரங்களில் நிலைமை தீவிரமான ஒரு கட்டத்தை எட்டக் கூடும் என்று தொற்று நோயியலாளர்கள் எச்சரித்துள்ளனர்.**

முன்னேற்பாடாக அடுத்த வாரம் சுமார் நூறு மெற்றிக் தொன் மருத்துவ ஒட்சிசன் இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ளது என்று சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராய்ச்சி தெரிவித்திருக்கிறார்.

தேவையைப் பொறுத்து தொடர்ந்து வாராந்தம் அதே அளவு ஒட்சிசன் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் அவர் ஊடகங்களுக்குத் தெரிவித்தார்.

ஒட்சிசன் உதவியுடன் சிகிச்சையளிக்கப்பட வேண்டிய நோயாளர்களின் எண்ணிக்கை அதிகரித்து வருவதாக மருத்துவர்கள் விடுத்த எச்சரிக்கையை அடுத்தே ஒட்சிசன்; இறக்குமதி செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. நாளாந்த உயிரிழப்பு எண்ணிக்கை 150 என்ற சராசரியில் உள்ளது.

இலங்கையில் ஒக்ரோபர் நடுப்பகுதியில் டெல்ரா வைரஸின் உச்சக்கட்டமான அலை உருவாகும் என்று உலக சுகாதார நிபுணர்கள் மதிப்பிட்டுள்ளனர்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் தேசிய அளவிலான தொற்றுநோயியல் வல்லுநர்களை உள்ளடக்கிய சுயாதீன நிபுணர்கள் குழு ஐந்தாவது தடவையாகக் கூடி நாட்டின் சுகாதார நிலைவரத்தை ஆராய்ந்துள்ளது.

சுகாதாரக் கட்டமைப்பின் எதிர்பாராத சீர்குலைவை நாடு மிக விரைவில் சந்திக்க நேரிடும் என்று அக்குழு மதிப்பிட்டுள்ளது.

மருத்துவமனைகளின் படுக்கைகள் மற்றும் வசதிகள் 85 வீதத்துக்கு மேலும், அவசர சிகிச்சைப் படுக்கைகள் 90 வீதத்துக்கு அதிகமாகவும் நிறைந்து விட்டன. ஒட்சிசனில் தங்கியிருக்கின்ற நோயாளர்களது எண்ணிக்கை 528 இல் இருந்து ஓரிரு நாள்களில் (கடந்த 10 ஆம் திகதி நிலவரப்படி) 646 ஆக உயர்ந்துள்ளது என்பதை நிபுணர்கள் குழு அதன் அறிக்கையில் சுட்டிக்காட்டி உள்ளது.

ஓகஸ்ட் 9 ஆம் திகதி நிலைவரத்தின்படி நாட்டின் சனத்தொகையில் 15 வீதத்தினர் மாத்திரமே இரண்டு தடுப்பூசிகளையும் பெற்றுள்ளனர். தடுப்பூசி ஏற்றியவர்கள் நோய் எதிர்ப்புச் சக்தியைப் பெற்றுக் கொள்வதற்கு 23 வாரகாலம் எடுக்கும். எனவே அந்தக் காலப்பகுதியை நிறைவு செய்யாதவர்களும் வைரஸின் ஆபத்துக்களைச் சந்திக்க நேரிடும். தடுப்பூசி ஏற்றிக் கொள்ளாதவர்கள் மற்றும் முதல் ஊசியை மட்டும் ஏற்றியோர் தொற்றினால் தீவிர பாதிப்புகளைச் சந்திக்கின்ற வகையினரிலேயே அடங்கியுள்ளனர் என்பதை அறிக்கை சுட்டிக்காட்டி உள்ளது. (ஒ.இ)

## சுகாதார பரிசோதகர்கள் மீது தாக்குதல்

கொழும்பு, ஓக.16

வீடொன்றை தனிமைப்படுத்திய பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மீது தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் திக்வெல்ல, கொன்தெனிய பகுதியில் இடம்பெற்றுள்ளது.

தாக்குதல் மேற்கொண்ட குற்றச்சாட்டில் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குறித்த பகுதியில் கொரோனா தொற்றால் ஒருவர் உயிரிழந்தார். இதனையடுத்து உயிரிழந்தவருடன் தொடர்பைப் பேணிய வீடொன்றை தனிமைப்படுத்திய போது, ஏற்பட்ட வாக்குவாதம் தாக்குதலில் முடிந்தது என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஜ-இ)

## சுற்றுலா வலயங்களை இலக்குவைத்து பெரிய வீதிகள் விரைந்து அபிவிருத்தி

கொழும்பு, ஓக. 16

நாட்டின் அனைத்து சுற்றுலா வலயங்களிலும் உள்ள வீதிகள் அபிவிருத்தி செய்யப்படும். அபிவிருத்தி செய்ய வேண்டிய வீதிகள் பற்றிய விரிவான அறிக்கையை வழங்குமாறு நெடுஞ்சாலை அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ, அமைச்சின் செயலரைப் பணித்துள்ளார்.

இது தொடர்பில் அமைச்சரின் ஊடகப் பிரிவு அனுப்பி வைத்துள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

சுற்றுலாத்துறையின் ஊடாக எமது நாடு அதிக அளவில் அந்நிய செலாவணியைப் பெறுகிறது.

சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதாக இருந்தால் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டும். அனைத்தும் இலவசமாக அருகில் வரும் வரை காத்திருக்க முடியாது. நாம் பல வருடங்கள் முன்னோக்கி சிந்தித்து செயற்பட வேண்டும்.

எமது நாடு மிகவும் அழகான நாடு. மேலும், பல்வேறு காலநிலை வலயங்கள் உள்ளன. சில மணிநேரங்களில் வெவ்வேறு காலநிலை வலயங்களின் அனுபவத்தை பெற முடியும். உலகின் உயிரியல் பன்முகத்தன்மை கொண்ட இடங்களில் ஒன்றாக எமது நாடு காணப்படுகிறது.

நாம் சுற்றுலாப் பயணிகளை ஈர்க்க வேண்டுமானால் தேவையான வசதிகளை வழங்க வேண்டும். உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்ய வேண்டும். இவை எங்களை பற்றி சிந்தித்து செய்யும் பணிகளல்ல. எதிர்காலத்தைப் பற்றி சிந்தித்தே செயற்பட வேண்டும்.

எனவே, சுற்றுலா வலயங்களில் அபிவிருத்தி செய்யப்பட வேண்டிய வீதிகள் தொடர்பான விரிவான அறிக்கையொன்றை சமர்ப்பிக்குமாறு நெடுஞ்சாலை அமைச்சின் செயலாளர் ஆர்.டபிள்யு.ஆர். பிரேமசிறி மற்றும் நெடுஞ் சாலை அமைச்சின் அதிகாரிகளுக்கு அமைச்சர் ஜோன்ஸ்டன் பெர்ணான்டோ அறிவித்துள்ளார். (ஒ.இ)

### கிளிநொச்சி மருத்துவமனையில்

# அன்டிஜென் சோதனைக்கு தனியான அலகு ஆரம்பம்

கிளிநொச்சி, ஓக. 16

கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையில் அன்டிஜென் பரிசோதனைக்காக தனியான அலகு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது என்று கிளிநொச்சி மாவட்ட மருத்துவமனையின் பணிப்பாளர் மருத்துவர் எஸ்.சுகந்தன் தெரிவித்தார்.

நாட்டில் தற்போது கொவிட் 19 தொற்று அதிகரித்துவரும் நிலையில் கிளிநொச்சி மாவட்டத்திலும் தொற்று வீதம் தற்போது அதிகரித்துள்ளது.

நோய் அறிகுறிகள் காணப்படுபவர்கள் அன்டிஜென் பரிசோதனைகளை மேற்கொள்ள வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் நோக்குடன் மருத்துவமனையில் தனி அலகு ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. குறித்த அலகுக்கு பொதுமக்கள் எந்நேரமும் சென்று பரிசோதனை மேற்கொள்ள முடியும். வாரத்தின் அனைத்து நாள்களும் இந்த அலகு இயங்கும் என்று பணிப்பாளர் மேலும் தெரிவித்தார். (து-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உடல் இயலாமையும் தொற்று அறிகுறியே

## பொதுமருத்துவ நிபுணர் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஓக. 16

கொரோனா என்பதற்கு காய்ச்சல், தடிமன் என்பவை மட்டும் அறிகுறிகளல்ல, வயிற்றோட்டம், மூச்சு விடுவதில் கஸ்ரம், மூக்கடைப்பு, மூக்கால் தண்ணி வடிதல், உடல் இயலாமை போன்றவையும் அதற்குரிய அறிகுறிகளாகவே கொள்ளப்படுகின்றன என்று பொதுமருத்துவ நிபுணர் கஜந்தன் தெரிவித்தார்.

யாழ்ப்பாண மருத்துவ சங்கத்தின் ஏற்பாட்டில் நடைபெற்ற கொரோனா தொடர்பான விழிப்புணர்வு ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனாவின் தாக்கம் அதிகரித்துக்கொண்டு செல்கின்றது. உலகத்திலும் இலங்கையிலும் யாழ்ப்பாணத்திலும் டெல்டா திரிபின் தாக்கம் அதிகரித்துச் செல்கின்றது. இதுவரையில் 176 பேர் யாழ்ப்பாணத்தில் உயிரிழந்துள்ளனர். யாழ்ப்பாணத்தில் ஒரு வாரத்தில் ஒரு கொரோனா இறப்பு ஏற்பட்டுவந்த நிலையில், தற்போது அந்த எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

கொரோனா என்பது தொற்றாளர்களுடன் தொடர்பு கொண்டால் மாத்திரமே பரவும் என்பது கிடையாது. தொற்றாளர்களுடன் நேரடித்தொடர்பு கொள்ளாத சந்தர்ப்பங்களிலும் தொற்றுப்பரவுவதற்கான சந்தர்ப்பங்கள் உள்ளன.

கொரோனா நோய்த்தொற்று ஏற்பட்ட பிறகு அதனை வெளியில் சொல்லாமல் வீடுகளுக்குள் முடங்கியிருந்துவிட்டு நோய் முற்றிய நிலையில் மருத்துவமனைக்கு வந்த பல இளவயதுடையவர்களை நாங்கள் இழக்க வேண்டிய சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன.

இரண்டு மூன்று தினங்களுக்கு மேல் அதிகமாக காய்ச்சல் காணப்படல், தண்ணீர் அருந்தக் கஷ்ரம், சிறுநீர் கழிப்பதில் சிரமம் போன்ற அறிகுறிகள் உள்ளவர்கள் மருத்துவமனையை நாடுவது சிறந்தது.

அன்டிஜென் பரிசோதனை செய்தபின் எமக்கு தொற்றில்லை என சிலர் கூறுகின்றார்கள். இவ்வாறான அறிகுறிகள் இருந்து அன்டிஜென் பரிசோதனையில் தொற்றில்லை என வரும்போது கொரோனா உறுதியாக இல்லை என கூற முடியாது.

ஒட்சிசன் தேவைப்படும் அளவுக்கு நோயாளர் இருந்தால் நிச்சயமாக மருத்துவமனைக்கு வர வேண்டிய தேவை இருக்கின்றது. அவர்கள் சரியான நேரத்தில் மருத்துவமனைக்கு வரும்போதே சிகிச்சைகளை உரிய நேரத்துக்கு தொடங்கி உயிரிழப்புக்களை தவிர்க்க முடியும்.

அளவுக்கு மிஞ்சினால் அமிர்தமும் நஞ்சு என்பது போல தேவையில்லாத மருந்துகளை மருத்துவர்களின் ஆலோசனையின்றி பயன்படுத்த வேண்டாம்.

சினோபார்ம் தடுப்பூசி பெற்றவர்களுக்கு இரண்டு டோஸையும் போட்டு இரண்டு கிழமைகளுக்குப் பின்னரே உடலில் நோயெதிர்ப்பு சக்தி முழுமையாக உருவாகும். ஆகவே தடுப்பூசிகளை பொதுமக்கள் போட்டுக்கொள்ள வேண்டும்.

தடுப்பூசி போடுவதால் கொரோனா பரவாது என்பது இல்லை. ஆனால் தடுப்பூசியை செலுத்துவதன் மூலம் தீவிரமான கொரோனா பரவுகின்ற சந்தர்ப்பங்கள் குறைவாக இருக்கும்.

தடுப்பூசி போட்டுவிட்டோம் என்ற காரணத்துக்காக சுகாதார நடைமுறைகளை பின்பற்றாமல் விடக்கூடாது. அனைத்தையும் இறுக்கமாக பின்பற்ற வேண்டும். -என்றார். (த-26)


தங்கம்
பவுண் ஒன்றுக்கு
அதிகூடிய முற்பண
தொகையுடன்
பெறுமதிமிக்க
Lunch Bag ஒன்று



HDFC
Gold Loan
தற்போது தங்கப் பவுண் ஒன்றுக்கு
ரூ. 71,000/-
உங்கள் தங்கம் வீட்டிலிருப்பதைப் போலவே
மேலதிக விபரங்களுக்கு 071 88 00 999 / 070 66 00 998
HDFC BANK
HDFC வங்கி


# ராஜன் குடியிருப்பு மக்களுக்கு குடிதண்ணீர் வசதி



**கிளிநொச்சி, ஓக. 16**

**கிளிநொச்சி கோணாவில் கிழக்கு ராஜன் குடியிருப்பு பகுதி மக்களுக்கு, குடிதண்ணீர் வசதிக்கான தொகுதி அமைத்து வழங்கப்பட்டுள்ளது.**

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் முன்னாள் மாணவனும், தற்போது அமெரிக்காவில் வசிப்பவருமான நவரத்தினம் நமசிவாயம், தமது தாயார் நவரத்தினம் சரஸ்வதியின் நினைவாக இந்தத் தொகுதியை அன்பளிப்புச் செய்துள்ளார். குழாய்க்கிணற்றுக்கான நீர்ப்பம்பி, நீர்த்தாங்கி, நீர்த்தாங்கிக்குரிய கட்டமைப்பு என்பன உட்பட 86 ஆயிரம் ரூபா செலவில் இந்தத் தொகுதியை அமைக்க அவர் நிதி வழங்கி உதவியுள்ளார். (த-18)

# மட்பாண்ட தொழிலாளர்கள் ஏற்றுமதியின்றி பரிதவிப்பு



மன்னார், ஓக. 16

**இரண்டு வருடங்களாக நாட்டில் ஏற்பட்ட கொரோனா அச்சுறுத்தல் காரணமாக ஏற்படுத்தப்பட்ட பயணத் தடையால், மன்னார் மாவட்டத்தில் மண்பாண்ட தொழிலாளர்கள் பெரும் பாதிப்பை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவிக்கப்படுகின்றது.**

மன்னாரில் மடுக்கரை, கறுக்காக்குளம், செம்மண்தீவு போன்ற இடங்களில் மாத்திரமே மட்பாண்டங்கள் செய்யப்பட்டு வருகின்றன.

இங்கே செய்யப்படுகின்ற சட்டி, பானை, அடுப்புகள் போன்ற மட்பாண்டப் பொருள்களை வெளியிடங்களுக்கு எடுத்துச்சென்று விற்பனை செய்யவோ அல்லது வெளியிடத்தவர்கள் இங்கே வந்து பொருள்களை எடுத்துச் செல்வதற்கோ நாட்டு சூழ்நிலை பொருத்தமானதாக இல்லை. அதனால், உருவாக்கப்பட்ட பொருள்கள் தேங்கியுள்ளன. அதனால் தமது வாழ்வாதாரம் பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளதால் தமது பிள்ளைகளின் கல்வியும் பாதிக்கப்பட்டுள்ளது என்று தெரிவிக்கின்றனர்.

அது மட்டுமன்றி, எதிர்காலத்தில் மட்பாண்ட தொழில் மன்னார் மாவட்டத்தில் அற்றுப் போவதற்கும் வாய்ப்பு உள்ளது என்று அவர்கள் தெரிவிக்கின்றனர்.

எனவே, இதற்கு உரிய நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்று அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர். (த-213)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தடுப்பூசியில் வேறுபாடு பார்க்காது உடனடியாக ஏற்றிக் கொள்ளுங்கள்

## விக்னேஸ்வரன் அழைப்பு

**யாழ்ப்பாணம், ஓக. 16**

**அனைவரும் தவறாது தடுப்பூசிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். தடுப்பூசியின் பெயரென்ன? எந்த நாட்டில் உற்பத்தி செய்யப்பட்டது? இந்தத் தடுப்பூசியைப் போட்டால் உயிரிழப்பு ஏற்படுமா? அமெரிக்காவின் 'பைசர்' தடுப்பூசி வரும்வரை காத்திருப்போம் என்றெல்லாம் பாராது அந்தந்தப் பகுதிகளில் எந்தத் தடுப்பூசி வழங்கப்படுகின்றதோ அதனை 30 வயதுக்கு மேற்பட்ட அனைவரும் இரு தடவைகள் தவறாது பெறுதல் வேண்டும்.**



இவ்வாறு தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் நாடாளுமன்ற உறுப்பினர் சி.வி.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள ஊடக அறிக்கையில் தெரிவிக்கப் பட்டுள்ளதாவது:

உலகின் பல்வேறு நாடுகள் போன்று இலங்கையும் சென்ற வருடத்தில் இருந்து தற்போது வரை கொரோனாவின் கோரப்பிடிக்குள் சிக்கி பல மனித உயிரிழப்புக்களையும், நாட்டுக்கும், குடும்பங்களுக்கும் பொருளாதார இழப்புக்களையும் சந்தித்து வருகின்றன. தற்போது மிகவும் ஆபத்தான நிலை இலங்கையில் ஏற்பட்டுள்ளது.

தினசரி 100 - 150 வரையான உயிரிழப்புக்கள் இலங்கையில் ஏற்படுகின்றன. எனவே இலங்கையிலுள்ள சகல மொழிபேசும், சகல மதஞ் சார்ந்த எல்லோரும் கொரோனாவின் கோரப்பிடிக்குள் சிக்கியுள்ளதை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

சுனாமியின் போது போரில் ஈடுபட்டிருந்த அரச படைகளும் விடுதலைப் புலிகளும் சில நாள்கள் தமது பகைமையை மறந்து ஒன்று சேர்ந்து மக்களுக்கு உதவி புரிந்ததை இத் தருணத்தில் நினைவுபடுத்த விரும்புகின்றேன். ஆகவே அரசியல் வேறுபாடுகள் தாண்டி கொரோனாவிலிருந்து நாட்டை எப்படி மீட்கலாமென நாமனைவரும் ஒன்றுபட்டுச் சிந்திக்க வேண்டும்.

சுகாதாரத் துறையினரின் அறிவுரைப்படி தனிநபர் சுகாதாரம் பேணப்படல் அவசியம். தொழிலுக்குச் செல்வோர் தவிர மற்றவர்கள் வீடுகளிலேயே தங்கியிருத்தல் நன்மைதரும்.

ஏதேனும் தேவைகளுக்காக வெளியில் செல்லும் போது தவறாது முகக்கவசம் அணிதலும், தனிநபர் சமூக இடைவெளிகளைப் பேணலும் அவசியம். குறிப்பாக தற்போதைய இக்கட்டான காலத்தில் இரண்டு முகக்கவசங்களை அணிவது சிறப்பானது. காரணம் வீரியமிக்க டெல்ரா வகைக் கொரோனா வைரசின் பரவல் இலங்கையில் அதிகரித்துள்ளது. நான் கூட சற்று கவனமில்லாமல் இருந்து விட்டேன். தற்போது விழித்துள்ளேன். எம்மவர்கள் யாவரும் இந்த அடிப்படை விடயங்களில் கவனம் செலுத்த முன்வருவோமாக!

அனைவரும் தேவையற்ற வகையில் ஒன்று கூடும், ஒன்று திரளும் நிகழ்வுகளைத் தவிர்த்தல் வேண்டும்.

பெரிய நிகழ்வுகளெனின் ஒருசில மாதங்களேனும் ஒத்திவைத்து நடாத்துதல் சிறப்பு.

சுகாதாரத் துறையினரின் அறிவுறுத்தல்படி 2 நாள்களுக்கு மேல் காய்ச்சல், சளி, இருமல், தொண்டைநோ போன்ற சந்தேகத்திற்கிடமான அறிகுறிகள் இருப்பின் உடனடியாக அருகிலுள்ள வைத்தியசாலை அல்லது சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையைத் தொடர்பு கொள்ளல் வேண்டும்.

வெளியில் சென்று வருவோர் தவறாது மூக்கு, தொண்டைப் பகுதியில் இருக்கக் கூடிய கொரோனா வைரசினைக் கொல்லும் வகையில் தவறாது வேது பிடித்தல் வேண்டும். கொதிநீரில் ஆயுர்வேத தைலத்தில் சிறிதைச் சேர்த்து வேது பிடிக்கலாம்.

இஸ்ரேல், பிரிட்டன், ஆஸ்திரேலியா போன்ற நாடுகள் அனைவரும் தடுப்பூசி ஏற்றிக் கொள்ள வேண்டும் என்ற இறுக்கமான நடைமுறையைப் பேணி இன்று கொரோனாவின் மோசமான தாக்கத்திலிருந்து விடுபட்டுள்ளதால் நாமும் சுகாதாரத்துறையின் அறிவுரைப்படி அனைவரும் தடுப்பூசியைப் பெற்றுக் கொள்வோம்.

இறுதியாக அரசியல் காழ்புணர்வுகளைத் தாண்டி கொரோனா எனும் பேரிடரிலிருந்து நாட்டையும், உயிர்களையும் பாதுகாத்து வீழ்ந்து போகும் பொருளாதார நிலையிலிருந்தும் மீண்டெழுவதற்கு ஒன்றுபட்டு நிற்போமாக!

அதேவேளை எமது தமிழ் மக்களின் உரிமைகள் உடைமைகள் பறிபோகாமல், நிரந்தர அரசியற் தீர்வைப் பெறுதல் என்ற விடயங்களிலும் உறுதியுடன் செயற்படுவோமாக! கொரோனாவைக் காரணம் காட்டி அரசியல்வாதிகள் ஈடுபடும் அரசியல் செயற்பாடுகளை உன்னிப்பாகக் கவனித்து உரிய நடவடிக்கைகள் எடுப்போமாக, என்றுள்ளது. (ஒ.இ)

## அருணகிரிநாதர் சுவாமிகளின் மறைவுக்கு அகில இலங்கை இந்து மாமன்றம் இரங்கல்

யாழ்ப்பாணம், ஓக.16

மதுரை ஆதீனத்தின் 292 ஆவது குருமகா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாதர் சுவாமிகளின் மறைவுச் செய்தி கேட்டு மனம் மிக வருந்துகிறோம் என்று அகில இலங்கை இந்து மாமன்றம் தெரிவித்துள்ளது. இந்து மாமன்றம் வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலே இவ்வாறு தெரிவிக்கப்பட்டது.

அதில் மேலும் உள்ளதாவது;

சுவாமிகள், ஆதீனத்தின் 292 ஆவது குருமகா சந்நிதானமாக பொறுப்பேற்று கடந்த 40 ஆண்டுகளாக பெரும் பணிகளை ஆற்றியவர். மடத்தின் பரிபாலனத்தின்கீழ் உள்ள ஆலயங்களை பரிபாலிப்பதுடன் தெய்வ சொத்துக்களை காக்கும் பெரும் பொறுப்பையும் முன்னைய குருமகா சந்நிதானங்கள் போல சிறப்புடன் ஆற்றியவர். அவரது தலைமையில் தமிழ்நாட்டின் பல ஆலயங்கள் சிறப்புடன் குடமுழுக்கு செய்யப்பட்டன.

ஆன்மீகப்பணியுடன் இணைந்து பல்வேறு சமூகப் பணிகளையும் ஆற்றிவந்ததுடன் அனைத்து மத மக்களுடனும் நல்லதோர் உறவைப்பேணி எல்லா மத மக்களாலும் பெரிதும் மதிக்கப்பட்ட ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளின் மறைவு ஈடுசெய்ய முடியாத இழப்பாகும் - என்றுள்ளது. (ஐ)

## அருணகிரிநாதர் சுவாமிகளின் மறைவுக்கு இந்து குருமார் அமைப்பு இரங்கல்

யாழ்ப்பாணம், ஓக.16

அருணகிரிநாத ஸ்ரீ ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் சமயப்பணிக்கு அப்பால் ஆன்மீகப் பணி, அரசியல் பணி, சமுதாயப்பணி, சமயநல்லிணக்கம் என பலவகையிலும் உழைத்ததுடன் குரல் கொடுத்துமுள்ளார். எமது சமயத்துக்கு தொய்வு ஏற்பட்டுள்ளது போல சுவாமிகளின் மறைவுச் செய்தி கிடைத்தது. என்று இந்து குருமார் அமைப்பின் தலைவர், செயலாளர் இணைந்து கூட்டாக இரங்கல் தெரிவித்துள்ளனர். ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞான சம்பந்த தேசிக பரமாச்சார்ய சுவாமிகள் உடல்நலக் குறைவால் உயிரிழந்தார். அன்னாரின் மறைவை முன்னிட்டு வெளியிட்டுள்ள இரங்கல் செய்தியிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளனர். அதில் மேலும் உள்ளதாவது;

ஆங்கில அறிவுடன் பிறசமய நூல்களின் அறிவு அவரிடம் சிறப்பாக இருந்தமை கண்டு வியந்துள்ளோம். மேலும் இலங்கையில் சைவமும் தமிழும் தழைத்தோங்க தொண்டாற்றியதோடு சிவாகமசேகரம், சிவலிங்கபிரதிஷ்டாவிதி உட்பட்ட பல சமஸ்கிருத, தமிழ் நூல்களை இயற்றி வெளியிட்டுமுள்ளார். மகா சந்நிதானம் அவர்கள் சிவப்பிராப்தி நிலை பெற்றிட அன்பே உருவான பரம்பொருளை வேண்டி இறை பிரார்த்தனையை நாம் இலங்கையில் இருந்து இந்துக் குருமார் அமைப்பின் சார்பில் செய்கின்றோம் - என்றுள்ளது. (ஐ)

## முல்லை. இ.போ.ச. சாலையினரின் போராட்டம் முடிவுக்கு வந்தது

முல்லைத்தீவு, ஓக.16

முல்லைத்தீவு மாவட்டச் செயலரின் உத்தரவுக்கு அமைய முல்லைத்தீவு இலங்கை போக்குவரத்து சாலையினரின் போராட்டம் முடிவுக்கு வந்தது.

நேற்றுமுன்தினம் அதிகாலை 4 மணியில் இருந்து இலங்கை போக்குவரத்து சபையினர் தமது சாலையை மூடி புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

முன் அறிவித்தலின்றி இலங்கை போக்குவரத்து சபையினர் போராட்டத்தில் ஈடுபட்டதால் பஸ்ஸுக்காக காத்திருந்த மக்கள் பெரும் நெருக்கடிகளை எதிர்கொண்டிருந்தனர்.

மாவட்டச் செயலர் எடுத்த நடவடிக்கை காரணமாக நேற்றுமுன்தினம் முற்பகல் 9.30 மணிக்குப் பின்னர் முல்லைத்தீவு சாலையின் இலங்கை போக்குவரத்து சபையின் பஸ்கள் பணியில் ஈடுபடத் தொடங்கின. (ஐ-13)

## ராகம மருத்துவமனையில் சடலத்தை காணவில்லை

கொழும்பு, ஓக. 16

ராகமை போதனா மருத்துவமனையில் தங்கியிருந்து சிகிச்சை பெறுவதற்காக அனுமதிக்கப்பட்ட நிலையில், உயிரிழந்த வயோதிப பெண்ணொருவருடைய சடலம் காணாமல் போயுள்ளதாக மருத்துவமனைத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வத்தளை ஹுனுபிட்டி பகுதியைச் சேர்ந்த 71 வயதான அழகேசன் சிவகாமி என்ற பெண்ணின் சடலமே இவ்வாறு காணாமல் போயுள்ளது.

இந்த பெண் ராகம மருத்துவமனையின் 30ஆவது விடுதியில் கடந்த 12ஆம் திகதி சேர்க்கப்பட்டிருந்தார்.

பெண்ணை பார்ப்பதற்காக 13ஆம் திகதி அவரது மகன் மருத்துவமனைக்குச் சென்ற வேளையில், அவர் உயிரிழந்துள்ளதாக மருத்துவ அதிகாரிகளால் அறிவிக்கப்பட்டுள்ளது.

[illegible] இல்லை. சடலம் [illegible] தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ.இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சட்டவிரோத மணல் அகழ்வு சந்தேகத்தில் ஐவர் கைது

கிளிநொச்சி, ஓக.16

சட்டவிரோத மணல் அகழ்வில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தருமபுர பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதிகளில் வைத்து 5 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

குற்றச் செயல்களை தடுக்கும் நோக்கில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்ட பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற தகவலுக்கு அமைய இவர்கள் கைது செய்யப்பட்டனர். கல்லாடர் பகுதியில் அனுமதிப்பத்திரம் முரணான வகையில் மணல் ஏற்றிய டிப்பர் இரண்டும் அதன் சாரதிகளும், புளியம்பொக்கணை மற்றும் தருமபுரம் பகுதிகளில் இரு டிப்பரும் அதன் சாரதிகளும், கல்மடு பகுதியில் ஒரு உழவு இயந்திரமும் அதன் சாரதியும் இவ்வாறு கைது செய்யப்பட்டனர். சந்தேகநபர்கள் தொடர்பான மேலதிக விசாரணைகளை தருமபுரம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ-113)

### வீதிகளில் நடமாடுவோருக்கு

# செப்ரெம்பர் முதலாம் திகதி முதல் தடுப்பூசி பெற்ற அட்டை கட்டாயம்

*மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் தெரிவிப்பு*

**மன்னார்,ஓக.16**

**மன்னார் மாவட்டத்தில் நடமாடுவதற்கு எதிர்வரும் முதலாம் திகதி முதல் தடுப்பூசி அட்டை அவசியம் என்று மன்னார் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவர் ரி.வினோதன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில், கொரோனா தொற்று சமூகப் பரவலாக மாறுவதை தவிர்க்கும் நோக்கில் அனைவரும் போக்குவரத்தின் போது தடுப்பூசி செலுத்தப்பட்டதை உறுதிப்படுத்தும் அட்டையை கட்டாயம் கொண்டு செல்ல வேண்டும். இதனை பொதுச் சுகாதாரப் பரிசோதகர்கள் , பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் பரிசோதனை செய்வார்கள். மேலும் மன்னார் மாவட்டத்தை நிரந்தர வசிப்பிடமாகக் கொண்ட 60 வயதுக்கு மேற்பட்டவர்கள் இதுவரை தடுப்பூசிகளை பெறாதிருப்பின் திங்கள், செவ்வாய் மற்றும் புதன் போன்ற நாள்களில் காலை 9 மணியில் இருந்து பிற்பகல் 3 மணி வரை 023 222 2916 எனும் இலக்கத்தோடு தொடர்பு கொண்டு பதிவுகளை மேற்கொள்ள முடியும். இதேவேளை மன்னார் மாவட்டத்தில் இதுவரை மொத்தமாக ஆயிரத்து 261 பேர் கொரோனா தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்- என்றார். (ஐ-213)

## நாமல், விமல் கூறியிருந்த கட்டில்களுக்கு என்னாச்சு?

*கேட்கின்றார் இம்ரான் மஹ்ரூப் எம்.பி*

கொழும்பு, ஓக. 16



நாட்டில் கொரோனாத் தொற்றாளர்களின் எண்ணிக்கை சடுதியாக அதிகரித்துவரும் நிலையில், அண்மையில் 10 ஆயிரம் கட்டில்களை கையளித்தேன் என்று நாமல் ராஜபக்சவும், அதி தீவிர சிகிச்சைப் பிரிவுக்கு கட்டில்களை தயாரித்தோம் என்று விமல் வீரவன்சவும் கூறியிருந்தனர். தொற்று அதிகரிப்பால் இப்போது நோயாளிகள் தரையில் உறங்கும்போது மேற்குறித்த இருவரும் கூறியவையெல்லாம் எங்கே?

இவ்வாறு கேள்வியெழுப்பியுள்ளார், திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இம்ரான் மஹ்ரூப்.

கிண்ணியாவிலுள்ள அவரது அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:

கொரோனா வைரஸின் டெல்டா திரிபின் தாக்கம் இலங்கையில் உச்சத்தைத் தொட்டுள்ளது. சில மாதங்களுக்கு முன்பு இந்தியாவில் காணப்பட்டதை விட பயங்கரமான நிலையில் தற்போது இலங்கை உள்ளது. மருத்துவமனைகளில் இடமில்லை. தீவிர சிகிச்சைப் பிரிவில் இடமில்லை. நோயாளிகள் மருத்துவமனை வளாகத்தில் தரையில் ஒட்சிசன் சிலிண்டருடன் உறங்கும் ஒளிப்படங்கள் தொடர்ச்சியாக காணக்கிடைக்கின்றன.

இறப்புக்களின் எண்ணிக்கை நாளாந்தம் நூறைத் தாண்டுகிறது. ஆனால், அரசால் கூறப்படும் இறப்புகளின் எண்ணிக்கையைவிட இது அதிகமாக இருக்கலாம் என கூறப்படுகிறது. ஜனாதிபதிக்கே பிழையான எண்ணிக்கையை வழங்கும்போது இது எவ்வாறு உண்மையாக இருக்க முடியும்.

இன்று பொருள்களின் விலை உச்சத்தைத் தொட்டுள்ளது. மூன்று வேளையும் உண்ட மக்கள் ஒரு வேளை உண்ண முடியாமல் தவிக்கின்றனர். பொருள்களுக்கு சந்தையில் தட்டுப்பாடு. பால்மா இல்லை. இப்போது சமையல் எரிவாயுவும் இல்லை. எரிவாயுவுக்காக மிக நீண்ட வரிசையில் சிலிண்டர்களுடன் பல மணி நேரம் வீதியில் காத்துக் கிடக்கும் அவலம் ஏற்பட்டுள்ளது. என்றார். (த-இ)

## நெல்லின் விலையை அதிகரிக்கவேண்டும்

*கரைதுறைப்பற்று பிரதேச சபையில் தீர்மானம்*

முல்லைத்தீவு,ஓக.16


நெல்லின் விலை அதிகரிக்கப்படவேண்டும் என்று கரைதுறைப்பற்று பிரதேச சபையில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.

பிரதேச சபையின் மாதாந்த அமர்வு அண்மையில் நடைபெற்றது.

இதன்போது உரையாற்றிய பிரதேச சபை உறுப்பினர் த.அமலன், விவசாயிகளுக்குத் தேவையான உரம் மற்றும் கிருமிநாசினிகள் தற்போது அதிக விலைகளுக்கு விற்பனை செய்யப்படுகின்றன. இருப்பினும் விவசாயிகள் அறுவடைசெய்கின்ற நெல்லின் விலை அதிகரிக்கப்படவில்லை. இதனால் விவசாயிகள் பெரியளவில் அசௌகரியங்களையும் எதிர்கொள்கின்றனர்.

எனவே இதனைக் கருத்திற்கொண்டு கிருமிநாசினி மற்றும் உரம் என்பவற்றின் விலையேற்றத்துக்கு ஈடாக நெல்லின் விலையும் அதிகரிக்கப்பட வேண்டும்" என்ற கோரிக்கையை முன்வைத்தார்.

இதனையடுத்து இத் தீர்மானத்தை சபை உறுப்பினர்கள் அனைவரும் ஏகமனதாக ஏற்றுக்கொண்டனர். (ஐ-246)



## நாடாளுமன்ற பொலிஸார் 10 பேருக்கு கொரோனா

கொழும்பு, ஓக. 16

கடந்த 2 ஆம் திகதி தொடக்கம் தற்போதுவரை நாடாளுமன்ற பொலிஸ் அதிகாரிகள் பத்துப் பேர் கொரோனாவால் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. இவர்களில் பெரும்பாலானோர் வீட்டில் தனிமைப்படுத்தப்பட்ட நிலையில் கொரோனாத் தொற்று இருப்பது கண்டறியப்பட்டுள்ளது எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

அதன்படி, நாடாளுமன்றத்தின் பாதுகாப்பைக் கருத்திற்கொண்டு, பொலிஸ் தலைமை அதிகாரிகள் குழுவை கடமையில் ஈடுபடுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

விடுமுறையில் செல்லும் அனைத்து பொலிஸ் அதிகாரிகளுக்கும் விரைவான அன்டிஜென் சோதனைகளை நடத்தவும், முடிவுகளின்படி மட்டுமே நாடாளுமன்ற வளாகத்தில் பணியில் அமர்த்த வேண்டும் என்றும் பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது. (த-இ)

## மட்டு.காராமுனையில் 8 ஏக்கர் காடழித்து நிலம் ஆக்கிரமிப்பு

*தடுக்குமாறு மக்கள் வலியுறுத்து*

மட்டக்களப்பு, ஓக. 16

மட்டக்களப்பு காராமுனைப் பகுதியிலுள்ள வனத்தில் மரங்களை வெட்டித் தீயிட்டு, சுமார் 8 ஏக்கர் பகுதி அழிக்கப்பட்டு, நில ஆக்கிரமிப்பு நடவடிக்கையொன்று முன்னெடுக்கப்பட்டுள்ளதாக அந்தப் பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர். வாகனேரி வனப்பகுதியிலுள்ள காராமுனை கிராமத்துக்கு முன்பாகவுள்ள குறித்த காட்டில், கடந்த சில தினங்களுக்கு முன்னர் சிலர் ஊடுருவி, அங்கிருக்கும் பழமைவாய்ந்த மரங்களை வெட்டி, வீழ்த்தி தீயிட்டு எரித்துள்ளனர்.

இதனால் சுமார் 8 ஏக்கர் காடு அழிக்கப்பட்டுள்ளது. ஆகவே இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேகநபர்களை கண்டுபிடித்து, அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (த-இ)

### ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான

## தகவல்களை அம்பலப்படுத்திய அபேகுணசேகர அமெரிக்கா பறந்தார்

கொழும்பு, ஓக. 16

ஈஸ்டர் தாக்குதல் பற்றிய முக்கிய தகவல்களை அண்மையில் அம்பலப்படுத்தியிருந்த தேசிய பாதுகாப்பு பற்றிய ஆய்வுப் பணியகத்தின் முன்னாள் தலைவரான, சட்டத்தரணி அசங்க அபேகுணசேகர திடீரென அமெரிக்கா சென்றுள்ளார் என்று தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த 09ஆம் திகதி இணையத்தளம் ஒன்றின் நிகழ்ச்சியில் பங்கேற்றிருந்த அசங்க அபேகுணசேகர, ஈஸ்டர் தாக்குதல் பற்றிய பல விடயங்களை வெளியிட்டிருந்தார்.

குறிப்பாக, அரச புலனாய்வுப் பிரிவின் முன்னாள் தலைவர் நிலந்த ஜயவர்த்தன பல விடயங்களை மூடிமறைத்தார் என்று அவர் குற்றஞ்சாட்டியிருந்தார்.

மேலும் கொழும்பிலுள்ள இந்தியத் தூதரகத்தில் இருந்த அந்தநாட்டைச் சேர்ந்த பிரபல புலனாய்வு பிரிவு அதிகாரி ஒருவர் தாக்குதல் இடம்பெற்ற தினத்தில் காலை 6.30 அளவில் தொலைபேசி ஊடாக நிலந்த ஜயவர்த்தனவுடன் தொடர்புகொண்டு, "இன்று தான் தாக்குதல் நடத்தப்போகின்ற தினம்" என்பதை தெரிவித்து எச்சரித்திருந்தார் என்று அந்த நேர்காணலின்போது அசங்க அபேகுணசேகர கூறியிருந்தார்.

இந்த நிலையிலேயே நேர்காணலை வழங்கிய தினத்தன்று மாலையில் அவர், அமெரிக்கா சென்றுவிட்டார் என்று தகவல்கள் வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியுள்ளன. (த-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தரம்-5 புலமைப்பரிசில் பரீட்சை மாதிரி வினாத்தாள்

உதயன் கல்விப் பிரிவு

**M.P. விஜிந்தன்**
Na.Dip.In.Teaching(Merit), B.A, PGDE,
Dip.In.Couns, MED (2[ed] upper)

பரீட்சை இலக்கம் 3

பகுதி 2

**பெயர் : ..............................** **நேரம் : 1 மணித்தியாலம் 15 நிமிடம்**

**01. பின்வரும் பந்தியை நன்றாக வாசிக்குக.**

பாடசாலை மாணவர்களாகிய நாங்கள் கல்விச் சுற்றுலா ஒன்றை மேற்கொண்டு பின்னவல என்ற இடத்திலுள்ள யானைகள் சரணாலயத்துக்குச் சென்றோம். அங்கு யானைகள் குளிப்பதும் தும்பிக்கையால் தண்ணீரை விசிறுவதும் கண்கொள்ளாக் காட்சியாக இருந்தது. அங்கிருந்து புறப்பட்டு கண்டி மாநகருக்குச் சென்றோம், இயற்கை எழிலோடு சேர்ந்த ஓர் அழகிய நகரம் அது. பூத்துக் குலுங்கும் மரங்களும் தெப்பங்குளமும் அருகே தலதா மாளிகையின் தங்கக்கூரையும் கண்டி மாநகரை தேவலோகம் போலத் திகழச்செய்தன.

கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்குரிய விடைகளைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து, புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(i) மாணவர்கள் கல்விச் சுற்றுலாவை மேற்கொண்டு எவ்வெவ் இடங்களுக்குச் சென்றனர்?

..............................................................................................

(ii) கண்ணையும் கருத்தையும் கவரும் தோற்றம் என்னும் கருத்தைத் தரும் சொல்லை எழுதுக.

..............................................................................................

(iii) தன்மைப் பன்மைச் சொல் ஒன்றைப் பந்தியிலிருந்து தெரிந்தெடுத்து, எழுதுக.

..............................................................................................

(iv)ஒற்றைக்கொம்பு, இரட்டைக்கொம்பு ஆகிய இரண்டும் இடம்பெறும் வினைச் சொல்லைப் பந்தியிலிருந்து கண்டுபிடித்து எழுதுக.

..............................................................................................

(v) தங்கக்கூரை என்பதைப் பிரித்து எழுதுக.

..............................................................................................

(vi) பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள உவமானத்தை எழுதுக.

..............................................................................................

02.

(அ) கீழே தரப்பட்டுள்ள வாக்கியங்களில் இருக்கும் வெற்றிடத்திற்குப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்து கீறிட்ட இடத்தில் எழுதுக.

(i) நீ நீடூழிகாலம் ........................ (வாழ்,வாள்)

(ii) ஆடைகள் விற்பனை செய்யும் இடத்தை .................. (புடவைக்,புடைவைக்) கடை என்றும் அழைப்பர்.

(ஆ) கீழே தரப்பட்டுள்ள சொற்றொடர்களுக்குரிய தனிச்சொல்லைப் புள்ளிக் கோட்டின் மீது எழுதுக.

(i) எண்பதாவது ஆண்டு நிறைவில் எடுக்கப்படும் விழா : ............................

(ii) தாய், தந்தை, ஆசான்,அண்ணன், அரசன் என்போர் : ............................

(ii) அகரவரிசையில் சொற்களின் கருத்தைக் கூறும் நூல்: ............................

03. கீழே தரப்பட்டுள்ள வாக்கியத்தைப் பூரணப்படுத்துக

யானை பிளிரும் என்பது போல குதிரை ...............................................

04. பின்வரும் பழமொழிக்குப் பொருத்தமான சொல்லை எழுதிப் பூரணப்படுத்துக.

............................................. வெயிலில் தெரியும்.

05. கீழே தரப்பட்டுள்ள கவிதையில் உள்ள வெற்றிடத்தை பூரணப்படுத்தி எழுதுக.

வாழ்வைக் கெடுப்பது கோபம்
வதை செய்வது பாவம்
..................................................
பேசுவதும் பரிகாசம்.

06. கீழே தரப்பட்டுள்ள ஆண்பாற் சொற்களுக்குப் பொருத்தமான பெண்பாற் சொற்களை எழுதுக.

(i) தலைவன் ......................................

(ii) குயவன் ......................................

(ii) பிரதம அதிதி பரிசில்கள் வழங்கினார் இங்கு அதிதி என்பதன் கருத்தை எழுதுக.

..............................................................................................

07. தரப்பட்டுள்ள சொற்களை ஒழுங்குபடுத்திக் கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.

(i) அஞ்சல் நிலையத்தினால் / வகையான/ பல/ நாம் /அடைகிறோம் /நன்மைகளை

..............................................................................................

(ii) அபூர்மவமான/ கண்டேன் / நான் / பிராணிகளைக் / அங்கு

..............................................................................................

08. பின்வரும் வாக்கியங்களுக்கு பொருத்தமான நிறுத்தற் குறிகளை இடுக.

(ii) தம்பி இங்கே வாரும்

(ii) அம்மா நான் பாடசாலைக்குச் செல்கின்றேன்

09. பின்வரும் வாக்கியங்களை எழுத்து மொழியில் எழுதுக.

(i) நாங்க கடக்கரையில் விளையாடினோம்.

..............................................................................................

(ii) சுற்றுப்புரத்தை தூய்மையாக வைத்திருப்போம்.

..............................................................................................

10. பின்வரும் சொற்களை அகரவரிசைப்படுத்தி எழுதுங்கள்.

சுலபம், சொத்து, சாலை, சைகை, சோறு, சௌக்கியம், சிங்கம், சந்தம், சூடம், சீட்டு, சேதம், செண்டு.

..............................................................................................

11. பின்வரும் ஆங்கில வாக்கியங்களின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) What is this vegetable? ..............................................

(ii) Name three fruits ..............................................

12.பின்வரும் வாக்கியத்தின் கருத்தை ஆங்கிலத்திற்கு மாற்றி ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.

(i) நீங்கள் ஆயத்தமா? ..............................................

(ii) பின்வரும் பிராணியின் பெயரை ஆங்கிலத்தில் எழுதுக.



..............................................

13. பின்வரும் சிங்களச் சொல்லின் கருத்தைத் தமிழில் எழுதுக.

(i) லதா அத்துலட்ட என்ன : ..............................................

(ii) மஹே மல்லி : ..............................................

14. பின்வரும் சிங்களச் சொற்களின் கருத்தை தமிழில் எழுதுக.

(i) வசிகிலிய : ..............................................

(ii) கிரீடாபுமிய : ..............................................

15. (i) 26314 என்ற எண்ணை சொற்களில் எழுதுக.

..............................................................................................

(ii)

| | |
|---|---|
| 3 | 6 |
| 9 | 0 |

இவ்விலக்கங்களைப் பயன்படுத்தி உம்மால் ஆக்கக்கூடிய மிகச்சிறிய எண்ணை இலக்கங்களில் எழுதுக.

..............................................

16.




இப் பூச்சாடியில் காணப்படும் பூக்களின் எண்ணிக்கைக்கு முன்னால் உள்ளஎண்ணையும், பின்னால் உள்ள எண்ணையும் உரோமன் எண்ணில் எழுதுக.

..............................................

17. எண்கோலத்தில் அடுத்துவரும் இரு எண்களையும் வெற்றிடத்தில் எழுதுக.

330, 340, 347, 354, 364, 374,..............................................




பாத்திரம் A ஐ பாத்திரம் B ஐக் கொண்டு எத்தனை தடைவையில் நிரப்பலாம்.

19. வளர்ப்பு மீன்களை விற்கும் கடையொன்றின் உரிமையாளர் ஒருநாளில் 454 தங்கமீன்களையும், 282 தேவதை மீன்களையும் 328 வேறு வகையான மீன்களையும் வாங்கினார். கடையில் 25 பெரியமீன் தொட்டிகளும்,ஒரு சிறிய மீன் தொட்டியும் உள்ளது அந்நாளிலே அவர் வாங்கிய மீன்களை சமமாகப் பிரித்து பெரிய தொட்டிகளிலும், எஞ்சிய மீன்களை சிறிய தொட்டிகளிலும் போடுவாரெனின்.

(i) ஒரு பெரிய தொட்டியில் போடப்பட்ட மீன்களின் எண்ணிக்கை யாது?

..............................................................................................

(ii) சிறிய தொட்டியில் போடப்பட்ட மீன்களின் எண்ணிக்கை யாது?

..............................................................................................

20 பாடசாலை விழாவொன்றுக்கு வருகை தந்தவர்களுக்கு வழங்குவதற்காக குளிர்பான போத்தல்கள் வாங்கப்பட்டன. ஒவ்வொன்றும் 24 போத்தல்களை உடைய 56 பெட்டிகள் வீதம் மூன்று வாகனங்களில் பானங்கள் கொண்டு வரப்பட்டன. விழாவில் கலந்துகொண்ட அனைவருக்கும் பானம் வழங்கப்பட்டது எனின் விழாவில் எத்தனைபேர் கலந்துகொண்டனர்?

..............................................................................................

21. நூலகத்துக்கு புறப்பட்ட குமார் புத்தகங்களை படிப்பதற்காக 3 மணித்தியாலமும் 45 நிமிடமும் செலவுசெய்தான். அங்கிருந்து பிற்பகல் 2.25 இற்கு வீட்டிற்கு புறப்பட்டான் எனின் குமார் நூலகத்திற்கு சென்ற நேரத்தை நியமநேரத்தில் தருக?

..............................................................................................

22. ஒரு கடையில் வைக்கப்பட்டிருந்த விலைப்பட்டியலின் ஒரு பகுதி கீழே தரப்பட்டுள்ளது.

| | | |
|---|---|---|
| மா | 1 kg | ரூ 110.00 |
| பருப்பு | 1 kg | ரூ 190.00 |
| தேயிலை | 100 g | ரூ 72.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மோகன் கடைக்குச் சென்று 2kgமாவையும் 500g பருப்பையும் 250g தேயிலையையும் விலைக்கு வாங்கினான். அதற்காக அவன் ஒரே வகையான 9 காசுத்தாள்களையும் ஒரே வகையான வேறு 2 காசுத்தாள்களையும் 3 நாணயங்களையும் கடைக்காரரிடம் கொடுத்தான் மோகன் கடைக்காரரிடம் கொடுத்த.

(i) ஒரே வகையான 9 காசுத்தாள்களினதும் மொத்தப் பெறுமதி ரூபாய்களில் யாது?

.................................................................

(ii) மூன்று நாணயங்களும் யாவை? ரூ ............ ரூ............ ரூ............

(oo) மோகன் கொடுத்த ஒரே வகையான இரு காசுத்தாள்கள் எவை?

.................................................................

23. பாலன் தோட்ட வேலைக்காக வேலையாட்களை அழைத்தான்.அவ்வேலையை 3 மனிதர்கள் 8 நாட்களில் செய்து முடித்தனர் எனின் அவ்வேலையை 4 நாட்களில் எத்தனை மனிதர்கள் செய்துமுடிப்பர்?

.................................................................

24. 1l 750ml பெறுமானம் கொண்ட குளிர்பானப் போத்தலில் இருந்து 250ml கொண்ட குளிர்பானப் போத்தல்கள் எத்தனையை நிரப்பலாம்?

.................................................................


25. பிரபல பாடசாலை ஆசிரியையான டென்சியா மாணவர்களுக்காக வழங்கப்பட்ட 500 பென்சில்களில் 176 பென்சில்களை தன்னிடம் வைத்துக் கொண்டு மீதியை 3 பேர்களிடையே சமமாக பகிர்ந்தளித்தார் ஒருவருக்கு கிடைக்கும் பென்சில்களின் எண்ணிக்கை யாது?

.................................................................

26. அவந்திக்காவுக்கு அழகிய திண்ம வடிவப் பொருளொன்று கிடைத்தது. அதில் சதுர வடிவ முகமொன்றும் முக்கோண வடிவ முகங்களும் காணப்பட்டன. அதில் உள்ள முகங்களின் எண்ணிக்கைக்கும் விளிம்புகளின் எண்ணிக்கைக்கும் இடையிலான வித்தியாசம் என்ன?


.................................................................

27. இவ்வுருவில் காணப்படும் செங்கோணங்களின் எண்ணிக்கை யாது?




.................................................

28. கீழே 32m சுற்றளவு கொண்ட ஒரு சதுரவடிவமான காணித் துண்டின் அமைவு காட்டப்பட்டுள்ளது அதன் நிழற்றப்பட்ட பகுதியின் சுற்றளவு யாது?



.................................................

29. தரம் 5 மாணவர்கள் விரும்பும் நிறங்களின் விவரங்களை வரைபு காட்டுகிறது.




(i) ஊதா நிறத்தை விரும்பும் மாணவர்கள் 13 பேர் எனின் அதனை வரைபில் குறித்துக் காட்டுக.

.................................................

(ii) அதிக மாணவர்கள் விரும்பும் நிறத்துக்கும், மிகக் குறைந்த மாணவர்கள் விரும்பும் நிறத்துக்கும் இடையிலான வித்தியாசம் யாது?

.................................................

30. மனதை ஒரு நிலைப்படுத்தும் செயற்பாட்டில் நான்காவது படிநிலை
1. உறுதிப்பாடு 2. பிரார்த்தனை 3. உதிப்பு

31. விசர்நாய்க்கடி நோயைப் பரப்பும் பிராணிஅல்லாதது.
1. நாய் 2. குரங்கு 3. நுளம்பு

32. பின்வரும் உணவுக் கூட்டங்களில் உடலை நோயிலிருந்து பாதுகாக்கும் உணவுத் தொகுதி.
1. சோறு,முட்டை,வல்லாரை 2. பசளி,கரட்,வாழைப்பழம். 3. மீன்,முட்டை, இறைச்சி

33. "ஏலந்தண்டு இராமனாதா.."என்பது எவ்வகைப் பாடல்.
1. தோணிப்பாடல் 2. அரிவுவெட்டுப்பாடல் 3. வண்டிக்காரன் பாடல்.


34. குளிர்பானப் போத்தல் ஒன்றில் குறைந்தளவு சீனியைக் காட்டப் பயன் படுத்தப்படும் நிறம்.
1. சிவப்பு 2. பச்சை 3. மஞ்சள்.

35. போமலின் இடப்பட்ட மீனை உண்பதால் ஏற்படும் பாதிப்பு.
1. வயிற்றுவலி 2. சொறி 3. உதடுவீங்குதல்.

36. இலங்கையின் தேசிய இலட்சினையில் நிறைகுடம் குறித்துநிற்பது.
1. தன்னிறைவு 2. சௌபாக்கியம் 3. தார்மீகம்.

37. படகமுவவனத்தின் பெரும்பகுதிஅமைந்துள்ளமாவட்டம்.
1. குருநாகல் 2. அநுராதபுரம் 3. காலி

38. சரியான முறையில் அமைக்கப்பட்ட மின்சுற்று




39. உடைந்தகண்ணாடித் துண்டுகள், தகரங்களைப் போடப்பயன்படும் கழிவுத்தொட்டியின் நிறம்
1. பச்சை 2. சிவப்பு 3. நீலம்

40. தாவர இலைகளைச் சுருட்டி தமது வாழ்விடங்களை அமைத்துக்கொள்ளும் பிராணி எது?
1. தூக்கணாங்குருவி 2. அணில் 3. செவ்வெறும்பு

41. தேசப்படத்தில் ஆறுகளைக் குறித்துக் காட்டப் பயன்படுத்தப்படும் நியமநிறம்
1. பச்சை 2. சிவப்பு 3. நீலம்

42. பின்வரும் விளையாட்டுக்களில் கிராமிய விளையாட்டு அல்லாதது.
1. கபடி 2. பல்லாங்குழி 3. சதுரங்கம்

43. இலங்கையின் நாணயத்தாளில் கையொப்பம் இடுபவர்கள்.
1. நிதியமைச்சர், ஜனாதிபதி
2. நிதியமைச்சர், மத்திய வங்கி ஆளுநர்,
3. பிரதமர், மத்திய வங்கி ஆளுநர்.

44. வானில் மிக உயரத்தில் பறக்கின்ற கூர்மையான கண்கள் உடைய பறவை.
1. செண்பகம் 2. குழுகு 3. ஆந்தை

45. இலங்கையில் கடற்கரை இருக்கும் ஒரு மாவட்டம்.
1. முல்லைத்தீவு 2. வவுனியா 3. அநுராதபுரம்

46.  இவ்வுபகரணத்தைப் பயன்படுத்துவோர்.
1. கொத்தன் 2. தச்சன் 3. கொல்லன்

47. முள்முருங்கு பூக்கும் மாதம்
1. சித்திரை 2. ஆனி 3. புரட்டாதி

48. பின்வருவனவற்றுள் சூழல்நேய போக்குவரத்துச் சாதனம் அல்லாதது
1. துவிச்சக்கரவண்டி 2. மாட்டுவண்டி 3. முச்சக்கரவண்டி

49. மூடாமல் சமைக்கப்பட வேண்டிய உணவுப் பொருள்.
1. வற்றாளை 2. மரவள்ளி 3. தக்காளி

50. மகாவலி கங்கை கடலுடன் கலக்கும் இடம்.
1.திருகோணமலை 2. கொழும்பு 3. களனி

51. இரு காந்தத் துண்டுகளின் ஒத்த முனைகளை அருகே பிடிக்கும் போது.
1. ஒன்றையொன்று கவரும் 2. ஒன்றையொன்று தள்ளும். 3. மாற்றம் எதுவும் நிகழாது.

52. நீண்ட நாட்கள் பழுதடையாமல் இருக்கக் கூடியபழம்.
1. மா 2. பலா 3. பேரீச்சம் பழம்.

53. அதிக மாவட்டங்களை உள்ளடக்கிய மாகாணம்.
1. மேல் மாகாணம் 2. வடமாகாணம் 3. வட மத்தியமாகாணம்.

54. ஊசித்துளைக் கமராவின் ஊடாக பார்க்கும் போது எந்த ஒரு பொருளும்.
1. கிடையாகத் தோன்றும் 2. தலைகீழாகத் தோன்றும். 3. பெரிதாகத் தோன்றும்.

55. பெருந்தெருக்களை காட்ட தேசப் படத்தில் காட்டப்படும் நியம நிறம்.
1. கறுப்பு 2. மஞ்சள் 3. சிவப்பு

56. ஒருவர் நற்சான்றிதழ் பெறுவதற்கு செல்லவேண்டிய அலுவலகம்.
1. பிரதேச சபை 2. கிராம உத்தியோகத்தர் அலுவலகம் 3. பிரதேச செயலகம்

57. அதிவேக நெடுஞ்சாலையின் வழிகாட்டற் பலகையின் நிறம்.
1. பச்சை 2. வெள்ளை 3. நீலம்

58. புல்லாங்குழல் ஒன்றில் காணப்படும் துளைகள்.
1. 7 2. 8 3. 6

59. வாசனைத்திரவியம் தயாரிக்கப் பயன்படும் பிராணி
1. முள்ளம்பன்றி 2. மான் 3. கஸ்தூரிமான்

60. இன்றைய நெருக்கடியான சூழலில் பாடசாலைகள் இழுத்து மூடப்பட்டுள்ள நிலையில் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் நிகழ்நிலை மூலம் நடைபெற்று வருகின்றன. அவ் நிகழ்நிலை வகுப்புகளால் உமக்கு ஏற்படும் சாதகமான நிலைகள். என்னும் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.(எழுவாய் பயனிலைத் தொடர்புகள் முறையாக அமைவதோடு ஒவ்வொரு வாக்கியமும் ஐந்து சொற்களுக்கு மேல் அமைதல் வேண்டும்)

01. .................................................................

02. .................................................................

03. .................................................................

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய நாள்

**மேடம்:** ஒவ்வொரு விஷயத்திலும் கவனமாக இருப்பது அவசியம். வெளிநாட்டுத் தொடர்பு சந்தோஷத்தை அளிக்கும். நல்ல மனிதர்களின் உதவி கிடைக்கும். சுப நிகழ்ச்சிகள் நடக்கும்.

**இடபம்:** புதிய நட்பால் உற்சாகமடைவீர்கள். மனமகிழ்ச்சி உண்டு. நண்பர்களுக்கு இடையே இருந்த பிரச்சினை தீர்ந்து ஒற்றுமை மீளும். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**மிதுனம்:** எதிர்பார்த்த தொகை வரும். புண்ணியச் செயல் செய்வீர்கள். உழைப்பு கூடும் வியாபாரத்தில் லாபம் சற்றே உயரும். பணியில் இருந்த சிக்கல் தீரும். புத்துணர்ச்சி பெருகும் நாள்.

**கடகம்:** மேலதிகாரிகளிடம் கோபம் காட்ட வேண்டாம். திருப்திகரமான நாள். வேலைச்சுமை சற்றுக் குறையும். பொது வாழ்வில் உங்கள் பேச்சிற்கு மதிப்பளிப்பார்கள்.

**சிம்மம்:** உங்கள் நிலையில் உயர்வு கிடைக்கும் நாள். ஆரோக்யம் மீளும். கடினமான விஷயங்களையும் எளிதாக முடித்து மகிழ்வீர்கள். தியானம், தெய்வ வழிபாடு மனதுக்கு புத்துணர்வு தரும்.

**கன்னி:** உங்களால் பிறர் பயன் அடைவர். மகிழ்ச்சி அதிகரிக்கும். பணவரவு உண்டு. பழைய நண்பர் ஒருவர் தேடி வருவார். நண்பர் ஒருவருக்கு உங்களால் உயர்வு வரும்.

**துலாம்:** புதிய விஷயம் கற்று குடும்பத்தினரை அசத்துவீர்கள். உயரதிகாரி அதிசயிக்கும் படி நடந்து கொள்வீர்கள். சக ஊழியர்களுக்கு உதவுவீர்கள். உங்களின் திறமை வெளிப்படும்.

**விருச்சிகம்:** ஆடை, ஆபரணம் சேரும். தாயாரின் உடல்நிலை மேம்படும். குழந்தைகளின் செயல் ஒன்றால் குடும்பம் மகிழும் அரசாங்கத்தால் நன்மைகள் உண்டு.

**தனுசு:** சுற்றி இருப்பவர்களை புரிந்து கொள்ளும் வாய்ப்பு வரும். பொறுமையின்றி பொங்கி எழுந்து வாய்ப்பை நழுவ விடாதீர்கள். யாரோடும் வன்மம் வேண்டாம்.

**மகரம்:** வெறுத்து ஒதுக்கிய நண்பர்கள் வந்து உதவி கேட்பார்கள். முயற்சி வெற்றிபெற கடுமையாக உழைக்க வேண்டும். வியாபாரத்தில் ஈடுபாடு அதிகரிக்கும். திடீர் யோகம் கிட்டும்..

**கும்பம்:** அக்கம் பக்கத்தினரின் ஆதரவு உண்டு. பெரியோரின் ஆசி கிடைக்கும். உண்மையும், உழைப்பும் குறையாமல் இருந்தால் வெல்வீர்கள்.

**மீனம்:** எந்தச் சூழலிலும் உங்கள் கை ஓங்கும். நட்பால் ஆதாயம் உண்டு. வழக்கமான சுறுசுறுப்பு குறையாமல் பார்த்துக் கொள்ளுங்கள். : திட்டமிட்ட விஷயங்கள் தடையின்றி முடியும்..

# பிக்பாஸ் சீசன் 5 போட்டியாளர்கள் இவர்களா?




'பிக் பாஸ்' நிகழ்ச்சியில் இதுவரை ஒளிபரப்பான 4 சீசன்களும் ரசிகர்களை கவர்ந்தது என்றே சொல்லலாம். விரைவில் பிக்பாஸ் சீசன் 5 தொடங்கும் என்று தகவல்கள் அடிக்கடி வந்துக் கொண்டிருக்கின்றன. கொரோனா காரணமாக ஜுன் மாதம் தொடங்க வேண்டிய பிக்பாஸ் 5 நிகழ்ச்சி எதிர்வரும் ஒக்ரோபர் மாதத்துக்கு பிற்போடப்பட்டுள்ளது எனக் கூறப்படுகிறது.

இதனிடையே பிக்பாஸ் நிகழ்ச்சியில் கலந்துக் கொள்பவர்களின் பட்டியல் ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

அதில் குக் வித் கோமாளி கனி, சுனிதா, பாபா பாஸ்கர், சார்பட்டா பரம்பரை புகழ் ஜான் விஜய், நடிகைகள் ரம்யா கிருஷ்ணன், மைனா நந்தினி, செய்தி வாசிப்பாளர் கண்மணி, எம்.எஸ்.பாஸ்கர், லட்சுமி ராமகிருஷ்ணன், டிக்டாக் ஜி.பி.முத்து மற்றும் ஷகீலாவின் மகள் மிகா ஆகியோரின் பெயர்கள் இடம்பெற்றுள்ளன.

ஆனால், இந்தப் பட்டியல் உறுதி செய்யப்படவில்லை. விரைவில் பிக்பாஸ் சீசன் 5 நிகழ்ச்சியில் கலந்துக் கொள்பவர்களின் பட்டியல் அதிகாரப்பூர்வமாக வெளியாகும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

Mask என்பது சில சமயங்களில்
'முகக் கவசம்',
சிக்கலான தருணங்களில்
'முகமூடி'!










## வெற்றியின் மொழிகள்

1. ஒருபோதும் நேசிக்காததை விட, நேசித்ததும் இழந்ததும் சிறந்தது.
2. எந்தவொரு மனிதனும் மற்றவர்களை கீழே இழுப்பதன் மூலமாக ஒருபோதும் உயர்ந்ததில்லை.
3. விரக்தியில் வாடிவிடாதபடி, நான் என்னை செயலில் இழக்க வேண்டும்.
4. ஒரு துக்கத்தின் கிரீடம் மகிழ்ச்சியான நேரங்களை நினைவில் கொள்கிறது.
5. அறிவு வருகிறது, ஆனால் ஞானம் நீடிக்கிறது.
6. தங்கள் நாட்டைக் காப்பாற்றுவோரைப் போன்ற பெருமை வேறு எதுவும் இல்லை.
7. [illegible] போதும் எந்த [illegible] வதில்லை.



# 2 லீற்றர் சோடாவை 18.45 நொடியில் குடித்து கின்னஸ் சாதனை

2 லீற்றர் சோடாவை 18.45 நொடியில் குடித்து கின்னஸ் சாதனை படைத்துள்ளார். இங்கிலாந்தைச் சேர்ந்த யூடியூபர் ஒருவர். அமெரிக்காவின் நியூயார்க் மாகாணத்தைச் சேர்ந்தவர் எரிக் பேட்லேண்ட்ஸ் ப்ரூக்கர், இவர் ரேப் பாடகர், யூடியூபர் என பல விதமான திறமைகளை கொண்டவர்.

இந்நிலையில் இவர் சமீபத்தில் நியூயார்க் நகரில் செல்டம் என்ற பகுதியில் 'சுகர் ஃப்ரீ' 2 லீற்றர் சோடாவை வாங்கி 2 லீற்றர் சரியாக அளக்கும் ஒரு கண்ணாடிப் பாத்திரத்தில் ஊற்றிக் கொண்டார்.

இந்த சோடாவை அவர் வெறும் 18.45 நொடிகளில் குடித்து முடித்துவிட்டார். இந்நிலையில் அந்த காணொலி அவர் யூடியூபில் பதிவேற்றிய நிலையில் அதற்கு பயங்கரமான வரவேற்ப்பு கிடைத்தது. பலர் இவரை ஆச்சரியத்துடன் பார்த்தனர். கின்னஸ் சாதனை குழுவினர் இந்த வீடியோவின் உண்மைத் தன்மை குறித்து ஆய்வு செய்தனர். அதில் அவர் உண்மையிலேயே இந்த சோடாவை 18.45 நொடியில் குடித்தது தெரியவந்தது. இதையடுத்து அவர்கள் இதை கின்னஸ் சாதனையாக பதிவு செய்து கொண்டனர். இந்த செய்தி தற்போது வைரலாக பரவி வருகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## ஜோர்ச் கோட்டையிலும் சுதந்திர தின நிகழ்வுகள்

சென்னை, ஓக.16
சென்னை ஜோர்ஜ் கோட்டையில் 75ஆவது சுதந்திர தின விழா நேற்று நடைபெற்றது. இந்த விழாவில் பங் கேற்பதற்காக வந்த முதலமைச்சர் மு.க.ஸ்டாலினுக்கு அணிவகுப்பு மரி யாதை அளிக்கப்பட்டது.
முதலமைச்சர், மூவர்ண தேசியக்கொ டியை ஏற்றி வைத்து, மரியாதை செலுத்தினார். இதன்போது மூவர்ண பலூன்கள் பறக்கவிடப்பட்டன.
இந்த நிகழ்வை முன்னிட்டு அந்தப் பகுதியில் பொலிஸ் பாதுகாப்பு பலப்ப டுத்தப்பட்டிருந்தது. (எ-இ)

## மரண அறிவித்தல்

**செல்வி வனிதா பூவிலிங்கம் (ரூபி) B.A, Dip.in Edu**
**(ஆசிரியை இனுவில் மத்திய கல்லூரி)**



**மண்ணில்** 20.07.1964 **விண்ணில்** 13.08.2021

யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப் பிடமாகவும் கொண்ட செல்வி வனிதா பூவிலிங்கம் (ரூபி) கடந்த (14.08.2021) சனிக்கிழமை கர்த்தருக்குள் நித்திரை யடைந்துள்ளார்.
அன்னாரது நல்லடக்க ஆராதனை இன்று (16.08.2021) திங்கட்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக புனித கொஞ்சேஞ்சிமாதா சேமக்காலைக்கு எடுத்துச்செல்லப்படும்.
இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**85, தேவாலய வீதி, யாழ்ப்பாணம்.**

**தகவல்:**
**பூவிலிங்கம் சந்திரவதனா**
**021 222 7859**







# இந்தியாவின் சுதந்திர தினம் செங்கோட்டையில் நிகழ்வு!

**புதுடில்லி, ஓக.16**
**இந்தியாவின் 75ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு, புதுடில்லியில் உள்ள செங்கோட்டையில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி மூவர்ண கொடியேற்றி னார்.**

இந்த நிகழ்வில் பங்கேற்பதற்கு முன் னர் பிரதமர், மகாத்மா காந்தியின் நினைவிடத்துக்குச் சென்று மரி யாதை செலுத்தினார்.
டெல்லி செங்கோட்டைக்குச் சென்ற பிரதமர் நரேந்திர மோடியை, பாது காப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங், இணை அமைச்சர் அஜய் பட், பாதுகாப்புத் துறை செயலாளர் வைத் தியர் அஜய் குமார் ஆகியோர் வர வேற்றனர்.
அதைத் தொடர்ந்து நடைபெற்ற முப் படைகளின் அணிவகுப்பு மரியா தையை ஏற்றுக்கொண்ட பிரதமர் மோடி, மூவர்ண தேசியக் கொடியை ஏற்றிவைத்து மரியாதை செலுத்தி னார். இதன்போது தேசிய கீதம் இசைக்கப்பட்டது.
தேசியக்கொடி ஏற்றும் போது முதல் முறையாக இரு விமான படை விமா னங்கள் ஊடாக மலர்கள் தூவப் பட்டன.
இந்த நிகழ்வில் அமைச்சர்கள், முப் படைகளின் தலைவர்கள், உயர் அதிகாரிகள், முக்கிய பிரமுகர்கள், விளையாட்டு வீரர்கள் என பலர் பங் கேற்றிருந்தனர். (எ-இ)

## கொரோனாவால் உயிரிழந்த மருத்துவருக்கு உயர் விருது!

சென்னை, ஓக.16
கொரோனாத் தொற்றால் உயிரிழந்த மருத்து வருக்கு கல்பனா சாவ்லா விருது வழங்கப்படு கின்றது என்று தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அறிவித்தார்.
இந்தியாவின் சுதந்திர தினமான நேற்று, சென்னை கோட்டையில் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தேசியக் கொடியை ஏற்றி வைத்து சுதந்திர தின உரையாற்றினார். அதன் பிறகு சிறப்பாக பணியாற்றிய பல்வேறு தரப் பினருக்கு விருதுகளை வழங்கினார்.
மதுரை அனுப்பானடி அரசு நகர்ப்புற ஆரம்ப சுகாதார மையத்தில் பணியாற்றி கொரோனா வால் மறைந்த டாக்டர் சண்முகப்பிரியாவின் சேவையைப் பாராட்டி கல்பனா சாவ்லா விருது வழங்கப்பட்டுள்ளது.
இவர் கொரோனா நோய்ப் பரவலின்போது மருத்துவ பணியில் முன்மாதிரியாகவும், அர்ப் பணிப்புடனும் துணிவு மற்றும் தைரியத்துட னும் மருத்துவ சேவை செய்துள்ளார். கொரோனா 2ஆவது அலையில் 582 காய்ச் சல் சிறப்பு மருத்துவ முகாம்களில் பங்கேற்று 10 ஆயிரத்து 961 நபர்களிடம் கொரோனா பரிசோதனை எடுக்கும் பணியை மேற் கொண்டிருந்தார். இந்த முகாம்களின் மூல மாக 302 பேருக்கு கொரோனாத் தொற்று இருப்பதை கண்டறிந்து அவர்களுக்கு உரிய சிகிச்சையையும் மருத்துவ ஆலோசனைகளை யும் வழங்கினார். வீடுகளில் தனிமையில் இருந்த 52 கொரோனா நோயாளிகளின் வீடுகளுக்கே சென்று சிகிச்சை அளித்தார். இந்த நிலையில் டாக்டர் சண்முகப்பிரியாவுக்கு கடந்த மே மாதம் 10ஆம் திகதி கொரோனா தொற்று இருப்பது கண்டறியப்பட்டது.
அவருக்கு உரிய சிகிச்சை அளித்தும் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார். மறைந்த டாக்டர் சண்முகப்பிரியாவின் தீரமான, துணிவான மருத்துவ சேவையை பாராட்டும் விதமாக 2021ஆம் ஆண்டுக்கான துணிவு மற்றும் வீர சாகச செயல் திறனுக்கான கல்பனா சாவ்லா விருது இன்று வழங்கப்பட்டுள்ளது. (எ-இ)



## சிறுவர்களை தாக்கும் கொரோனா வைரஸ்!

சென்னை, ஓக.16
இந்தியாவில் கொரோனா தொற்றால் பாதிக்கப்படும் சிறுவர் களின் எண்ணிக்கை அதிகரித்து வருகின்றது என்று மருத் துவர்கள் தெரிவித்துள்ளனர்.
கர்நாடக மாநிலம் பெங்களூரில் ஓகஸ்ட் மாதத்தின் முதல் 10 நாள்களில் மட்டும் 499 குழந்தைகளுக்கு கொரோனாத் தொற்று ஏற்பட்டுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.
இது தொடர்பாக சுகாதாரத்துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்
பெங்களூரில் குழந்தைகளுக்கு கொரோனா தொற்று ஏற்ப டுவது அதிகரித்து வருகிறது. அடுத்த சில வாரங்களில் இந்த எண்ணிக்கை மேலும் அதிகரிக்கக்கூடும். பெற்றோர்கள் முதலில் இரண்டு டோஸ் கொரோனா தடுப்பூசி போட்டுக் கொள்ளவும், தங்கள் குழந்தைகளை முறையாக கண்கா ணிப்பது மட்டுமல்லாமல் கூட்டமான இடங்களுக்கு செல் வதை தவிர்க்கவும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். என்றார்.(எ-இ)

## இந்தியாவுக்குள் ஊடுருவிய பயங்கரவாதிகள்

புதுடில்லி, ஓக.16
ஜெய் ஷ் இ முகமது பயங்கரவாத இயக்கத்தைச் சேர்ந்த 5 பயங்கரவாதிகள் எல்லையில் ஊடுருவத் தயார் நிலையில், உள்ளனர் என்று இந்திய உளவுத் துறை தெரிவித்துள்ளது. சுதந்திரத் தினக் கொண்டாட் டத்தின்போது தாக்குதல்களை நடத்த பயங்கரவாதி கள் திட்டமிட்டுள்ளதாக உளவுத்துறை ஏற்கனவே எச்சரிக்கை விடுத்துள்ளது. இந்தத் தாக்குதல்களுக் காக பயங்கரவாதிகளுக்கு ஐ.எஸ்.ஐ அதிகாரிகள் பயிற்சி அளித்துள்ளதாகவும் கூறப்படுகிறது.
அதேநேரம் சில தினங்களுக்கு முன் அதிநவீன கண்ணி வெடிகளை பாகிஸ்தான் இராணுவம் இந்தி யாவுக்குள் அனுப்பி இருப்பது கண்டுபிடிக்கப்பட்டுள் [illegible] ஒவ்வொன் [illegible] உளவுத்துறை தெரிவித்துள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# கொரோனாவிலிருந்து எம்மைக்காக்க

நல்லூர் சைவத் தமிழ்
பண்பாட்டுக்கலைக்கூடம்

# இதுவும் கந்தனின் திருவிளையாடல்!

நாம் இப்போது பெரும் நெருக்கடியான காலகட்டத்தில் வாழ்கின்றோம் என்பதைத் தெளிவாகத் தெரிந்திருக்கின்றோம். பெரும் அவலச் சூழல் எமைச் சூழ்ந்துள்ளது. எக்காலத்திலும் இல்லாதவாறு இவ்வருடம் வேலவன் நல்லூர்க் கந்தனின் திருவிழா பெரும் இக்கட்டின் மத்தியில் வெகு அடக்கமாக அமைதியாக நடைபெறுகின்றது. வேலவர் கூட வெளியில் நடமாட முடியாது தனது வீட்டினுள்ளேயே இருக்க வேண்டிய நிலையையும் எம்மால் உணர முடிகின்றது.

பக்தர்கள் கந்தசுவாமியாரைத் தரிசிக்க முடியாது தவியாய் தவித்து வேதனை கொள்வதையும் எம்மால் உணரமுடிகின்றது. வேலவரும் வேதனைக்குள்ளாகியே இருப்பார். அதே நேரம் இந்த வேதனையும் ஆதங்கமும் எமக்கும் உங்களைப்போன்று உண்டு.

இவ்வாறாக முருகன் அடியவர்கள் தரிசனமின்றி வேலவன் திருவிழாக்கள் அமைதியாக நடைபெறவேண்டிய சூழல் தோன்றியதன் பின்னணியை நாம் தெளிவாக உணர்ந்து, உள்வாங்கி எமது நடத்தைகளைத் தீர்மானித்துக் கொள்ளவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். கண்ணுக்குக் காட்சிதராத மனித இனத்தின் எதிரி ஒன்று, இன்று உலகையே உலுக்கி ஆட்சி செய்து கொண்டிருக்கின்றது.

அதற்குள் எமது பிரதேசமும் மக்களும் விலக்குப் பெறமுடியவில்லை. வேகமாக உட்சென்று அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் காலமிது. எத்தனை தொற்றுக்கள், எத்தனை உயிரிழப்புக்கள்.

குண்டுவீச்சு விமானங்களால் தோன்றாத மனப்பயம், தொடர் எறிகணை வீச்சுக்களுக்கு கலங்காத உள்ளங்கள் இன்று தவித்துக் கிலிகொள்கின்றன. இதுதான் புராணங்கள் இயம்பிய கலிகாலமோவென மக்கள் கிலிகொண்டு, கலங்கித் தவிக்கின்றனர். மௌனமான மூன்றாம் உலகப்போர் நடைபெறுவதாகவும் அழிவு பல மடங்காகுமெனவும் எதிர்வு கூறப்படுகின்றது. மனித சமூகம் செய்வதறியாது தவித்து நிற்கின்றது.

**இந்தச் சந்தர்ப்பமதில் எம்மைக் காப்பாற்ற வல்லவர் காக்கும் தெய்வமான கந்தக் கடவுள் என்பதே எமது எல்லோரதும் நம்பிக்கை.**

**சிநோபாமோ, அஷ்ட்ரா செனிக்காவோ. பைரோ செய்யமுடியாததை எமது கலியுகவரதன் நல்லைக் கந்தப் பெருமான் கடைக்கண் பார்வை காத்தருளும் என்பது எமது எல்லோரதும் நம்பிக்கை. அதனாற்தான் இந்தத் திருவிழாக் காலத்தில் அவரைத் தரிசித்து ஆசி பெற விரும்புகின்றோம். காண முடியாததால் வேதனையுறுகின்றோம். வெம்புகின்றோம். ஆனால் ஒன்றை உணர மறுக்கின்றோம்! பெருமானது அருளாட்சியின் ஒரு அங்கந்தான் பக்தர்களைத் திருவிழாக் காண தனதுவாயிலிலே கூடவிடாது தடுத்தாட்கொண்டமையாகும். இந்த உண்மையை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.**

பக்தர்கள் தமைத் தரிசிக்க ஒன்று கூடின் பரவலின் தாக்கம் அதிகரிக்கும், அதனால் துன்புறுவர் என்பதற்காக தனது செயற்பாடுகளையே குறுக்கி ஆலயத்துள் அடைந்து கொண்ட அவரின் பெருங்கருணைச் செயற்றிறனை நாம் அனைவரும் உளமார உணர்ந்து தெளிவு பெறவேண்டும்.




பக்தகோடிகள் மத்தியில் ஆனந்தமாக ஆடிமகிழும் அலங்காரக் கந்தன் இவ்வருடம் தனது மகிழ்ச்சியை தவிர்த்து, பக்தர்களைக் காத்தருள்வதே என் முதற்பணியென ஆலயத்துள் அமைதி கண்டமைக்கு வேறு காரணம் எதுவும்காண முடியுமோ?

தேவஸ்தானத்தரிடமும், சுகாதாரத்துறையினரிடமும், மாநகரசபையினரிடமும், மற்றும் காவற்றுறையினரிடமும் பக்தர்கள் நலன்கருதி இறுக்க மனநிலையை பேண வைத்து அந்தக் கொடூரத் தொற்றில் இருந்து எமைக் காத்தருள எம்பெருமான் ஆற்றிய செயல் கண்டு உளம் உருகாதார் யாருளர்.

கடந்த காலங்களை சற்றுப் பின்நோக்கிப் பாருங்கள். மேற்கூறிய அவர்கள் அனைவரும் நாம் நல்லூர்க் கந்தக்கடவுளைத் தரிசிக்க புனிதத்தை, பாதுகாப்பை, வசதிகளை ஏற்படுத்தித் தரவில்லையா? நாம் உளமார கண்குளிர எம்பெருமானைத் தரிசித்து மனஅமைதி பெறவில்லையா?

**இம்முறை எம் சமூகத்தில் ஏற்பட்டுள்ள பெரும் அவல நிலை காரணமாகவே எமைக் காக்கும் நோக்குடன்தானே நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளனர்?**

**இவற்றை நன்குணர்ந்து பொறுப்புடன் நாம் செயற்படுவோம். வீட்டில் அமைதியாக இருந்து எம்பெருமானை மனத்திருத்தி வழிபாடு செய்வோம். அமைதியாக மனதை ஒருமுகப்படுத்தி இரு கண்களையும் இறுக மூடி, ஆசாரமாக எம்பெருமானை நினைவில் கொள்வோமானால் அவர் அங்கே தோன்றுவார்.** பச்சை வண்ண மயிலில் அவர் அழகாக அசைந்தாடி வரும் காட்சி அங்கே தெரியும். அதனை வணங்குவோம். எமக்காகவும் எமது சமூகத்துக்காகவும், எம்மை துன்புறுத்தும் இக்கொடிய அரக்கன் எனும் இத் தொற்று எமைவிட்டு தூர விலக வேண்டுமெனப் பிரார்த்திப்போம். மனக்கண்ணில் அழகனைக் கண்டு வணங்கும் [illegible] அளவிலா ஆனந்தத்தை அளிக்கவல்லது.

பெரும் ஞானிகளும் முனிவர்களும் மாத்திரமல்லாது, எமது ஆன்மீக வழிகாட்டிகளாம் நாயன்மார்களும் ஆழ்வார்களும் மற்றும் எமது சமகாலத்தில் வாழ்ந்த பெரியோகளும் இதனை நிரூபித்துள்ளார்கள். சுந்தரமூர்த்தி நாயனார் திருக்கேதீஸ்வரத்தை யும், திருஞானசம்பந்த நாயனார் திருக்கோணேஸ்வரத்தையும் நேரில் தரிசிக்காது மனக்கண்ணில் கண்டே அத்தலங்கள் பற்றிய காலத்தால் அழியாத பதிகங்களைத் தந்தனர்.

எம்முடன் வாழ்ந்த பிரம்ம ஸ்ரீ வீரமணி ஐயர் அவர்களும் அருட்கவி விநாசித்தம்பி ஐயா அவர்களும் இன்னும் நல்லூரில் வாழ்ந்த சித்தர்களான செல்லப்பா சுவாமிகள், யோகர் சுவாமிகள் ஆகியோரும் மனக்கண்ணில் காட்சிகளைப் பெற்று பல நற் காரியங்களை ஆற்றியுள்ளனர். உதாரணத்துக்கு இது தொடர்பாக வீரமணி ஐயா அவர்களின் ஒரு செயலைக் இங்கு குறிப்பிடலாம்.

ஒரு தடவை பிரபல இசைமேதை சீர்காழி கோவிந்தராஜன் அவர்கள் சுட்டிபுரம் அம்மன் கோவிலில் கச்சேரி செய்வதற்காக இந்தியாவிலிருந்து யாழ்ப்பாணம் வந்துள்ளார். நட்பு நிமித்தம் வீரமணி ஐயாவை அவர் வீட்டில் சென்று சந்தித்துள்ளார். இருவரும் பேசிக் கொண்டிருந்தபோது சீர்காழி அவர்கள் சுட்டிபுரம் அம்மன் கோவில் கச்சேரியில் பாடுவதற்கு கீர்த்தனை தருமாறு கேட்டிருக்கின்றார். ஐயாவுக்கு உடனே ஒரு சங்கடம். அவர் ஒரு தடவையேனும் அக் கோவிலைத் தரிசிக்க வாய்ப்புப் பெற்றிருக்கவில்லை. சீர்காழி கேட்டுவிட்டார், கொடுத்தே ஆக வேண்டும். கண்களை இறுக மூடி அந்த சக்தி அம்மாவை நினைத்து சிறிது நேரம் மௌனமாக இருந்தார், பின்னர் கண்விழித்து மளமளவென தனது மனக்கண்ணில் கண்டவற்றைக் கீர்த்தனையாக எழுதிக்கொடுத்தார்.

சீர்காழியாரும் அங்கிருந்தே ஐயாவுடன் இணைந்து மெட்டமைத்து கச்சேரியில் முதல் பாடலாகப் பாடியுள்ளார். **என்ன ஆச்சரியம் அங்கே ஐயா எழுதி கொடுத்த காட்சிகள் எல்லாம் கண்டுகொண்டார். கச்சேரி முடிவடைந்ததும் ஐயாவிடம் ஓடோடிச் சென்று அவர் காலில் விழுந்து வணங்கி தான் கண்டவற்றைக் கூறி மெய்சிலிர்த்துள்ளார்.**

**எனவே முருகனடியார்களே உண்மையான அன்பு பக்தி என்பவை அவரவர் உள்ளத்திலே பதிந்துள்ளன. 'உள்ளத்து அனையது உயர்வு' என்பர் வள்ளுவனார். மேலே கூறியவற்றின் மூலம் அதனை நன்கு உணர்ந்திருப்பீர்கள்.** முருகனைத் தரிசிக்க அவன் ஆலயம் சென்றுதான் தரிசிக்க வேண்டும் அது முடியவில்லையே என்று சிறிதும் கவலை கொள்ளாதீர். எமது உள்ளத்தால் முருகனைக் காணலாம். இந்த கொடூர காலகட்டத்தில் மற்றவர்க்கும் எம்பெருமானுக்கும் உள நெருக்கடிகளைக் கொடுக்காது எம்நிலை உணர்ந்து செயற்படுவோம். வீட்டிலிருந்தே வணங்குவோம். அதையே எமது கந்தசுவாமியாரும் விரும்புகின்றார்.

**வேலுண்டு வினையில்லை.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2,800 கர்ப்பிணிகளுக்கு இதுவரையில் கொவிட்!



கொழும்பு, ஒக. 16

நாட்டில் இதுவரை 2 ஆயிரத்து 800 கர்ப்பிணித் தாய்மார்களுக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என குடும்பநல சுகாதாரப் பணியகத்தின் பணிப்பாளர் விசேட வைத்திய நிபுணர் சித்ரமாலி டி சில்வா தெரிவித்தார்.

தொற்றுக்குள்ளான 21 கர்ப்பிணித் தாய்மார்கள் சிகிச்சை பயனின்றி இதுவரை உயிரிழந்துள்ளனர் எனவும் அவர் கூறினார். இதனிடையே, தொற்றுக்குள்ளான 700 கர்ப்பிணித் தாய்மார்கள் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார். கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கொரோனாத் தடுப்பூசியையும் வழங்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

சுகாதார அமைச்சின் ஆலோசனைக் குழுவின் பரிந்துரைக்கு அமைய இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இதன்படி, மொடர்னா, பைசர் மற்றும் அஸ்ட்ராசெனிகா தடுப்பூசிகளையும் கர்ப்பிணி தாய்மார்களுக்கு ஏற்ற முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இதற்கு முன்னர் கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சினோபார்ம் தடுப்பூசியை ஏற்றுவதற்கு மாத்திரமே பரிந்துரை செய்யப்பட்டிருந்தது. (ம-22)


## மரண அறிவித்தல்

### பத்மநாதன் விஜயகுமாரி

**தோற்றம்:16.11.1959** **மறைவு:14.08.2021**



ஊர்காவல்துறை தம்பாட்டியை பிறப்பிடமாகவும் கிளிநொச்சி அக்கராயன் குளத்தை வசிப்பிடமாக கொண்ட பத்மநாதன் விஜயகுமாரி 14.08.2021 அன்று காலமானார்.

அன்னார் காலம்சென்ற கனகரத்தினம், இரத்தினம் ஆகியோரின் அன்பு மகளும் பத்மநாதனின் அன்பு மனைவியும் காலம்சென்றவர்களான கந்தசாமி, பத்மதேவியின் அன்பு மருமகளும், பத்மரமணன் (பிரான்ஸ்), பத்மவதனன், உதயகலா, பத்மடினேஸ், சந்திரகலா (சிந்து) ஆகியோரின் அன்பு தாயாரும் தாட்சா, றோசாந்தி (மனிதவள உதவியாளர் - வானவில்) மயூரன், தர்சன் (அறிவிப்பாளர் இலங்கை ஒலிபரப்பு கூட்டுத்தாபனம் யாழ் fm) கஜிதா ஆகியோரின் மாமியாரும் தவமணிதேவி லோகநாதன் (பிரான்ஸ்), விஜயகுமாரி (பிரான்ஸ்), விஜயகுமார் (பிரான்ஸ்), ராஜகுமார் (பிரான்ஸ்), செல்லகுமார் (பிரான்ஸ்) விஜயரத்தினகுமாரி, சிறிகுமார், காந்தரூபன் ஆகியோரின் அன்பு சகோதரியும், காலஞ்சென்ற இந்திராணி, ரதிதேவி, ரஜனிதேவி, குமுதினிதேவி, கலாதேவி, ஸ்ரீதேவி, ஞானதேவி, சிவநாதன், ரகுநாதன், ரவிநாதன், ஜீவநாதன் ஆகியோரின் மைத்துனியும், வருண், பூமிகா, கர்சனா, வர்சனா, டிவேஸ், கவிஸ்ணா, கவிநாஸ், சஷ்விகா ஆகியோரின் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2021) திங்கட்கிழமை இல.03, கோணாவில் வீதி, அக்காரயன் இல்லத்தில் இடம்பெற்று தகனக்கிரியைக்காக அக்கராயன் கிழக்கு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.


இந்த அறிவித்தலை உற்றார் உறவினர்கள் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும் .

**தகவல்: குடும்பத்தினர்.**

## மரண அறிவித்தல்

மலர்வு 24 . 08 . 1985

உதிர்வு 15 . 08 . 2021



### கருணேஸ் சாந்தி

**(அபிவிருத்தி உத்தியோகத்தர், கல்வித் திணைக்களம், வட மாகாண அமைச்சு)**

வழக்கம்பரை தொல்புரத்தை பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட கருணேஸ் சாந்தி நேற்று (15.08.2021) அகால மரணமானார்.

அன்னார் சுமுகலிங்கம் கருணேஸ் (ரமணன்- பொலிஸ் உத்தியோகத்தர், இளவாலை) அவர்களின் பாசமிகு துணைவியும், காலஞ்சென்ற செல்வராசா, செல்வரதி அவர்களின் அன்பு மகளும், சுமுகலிங்கம் யோகாம்பிகை (பாமா) அவர்களின் அன்பு மருமகளும், ரமேஸ், நிறோஸ், தர்சி, வைஷ்ணவி ஆகியோரின் அன்பு மைத்துனியும், ஆதித், அபிஷ்ணா ஆகியோரின் பாசமிகு சித்தியும், மதுஷ், நிதுர்சிகா, சங்கவி, சங்கீர்த் ஆகியோரின் அன்பு அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2021) திங்கட்கிழமை பகல் அன்னாரின் இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக நவாலி, வழுக்கையாறு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**வடக்கம்பரை, தொல்புரம்.** **தகவல்: குடும்பத்தினர்.**

### நயினாதீவு



### ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவில் அம்பிகை மெய் அடியார்களுக்கு முக்கிய அறிவித்தல்

தற்போதய கொரோனா தொற்று (Covid - 19) தாக்கத்தின் தீவிரத்தன்மை காரணமாக மறு அறிவித்தல் வரையும் ஆலயத்திற்குள் அடியார்கள் எவரும் அனுமதிக்கப்பட மாட்டார்கள் என்பதை தெரிவிப்பதுடன் அடியார்கள் ஆலயத்திற்கு வருகை தருவதை தவிர்த்து தங்கள் இல்லங்களில் இருந்து அம்பாளை வேண்டி வழிபாடு செய்யுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**அறங்காவலர் சபை**
**ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்**
**நயினாதீவு**

## கண்ணீர் அஞ்சலி

மண்ணில் 17 . 07 . 1943

விண்ணில் 14 . 08 . 2021



எமது பல்கலைக்கழக நண்பன்

**இணுவையூர் ஜெயகாந்தனின்** அன்புத் தந்தையாராகிய

**கந்தையா மகேந்திரன்** அவர்களின்

திடீர் இறப்புச் செய்தியினால் துயருறும் அன்னாரின் குடும்பத்தாரின் துயரில் நாமும் பங்குகொள்வதுடன் அவரது ஆத்மா சாந்தியடைய எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கின்றோம்.

**"இனிய நண்பர்கள்"**
**2001-2002ஆம் கல்வியாண்டின்**
**யாழ்.பல்கலை கலைப்பீடநண்பர்கள்.**

## மரண அறிவித்தல்

தோற்றம் 16 . 01 . 1981

மறைவு 15 . 08 . 2021



### செல்வன் கதிரவேலு அகிலகுமார்

மாகியப்பிட்டியை பிறப்பிடமாகவும் அதே இடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட செல்வன் கதிரவேலு அ லகுமார் நேற்று (15.08.2021) ஞாயிற்றுக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கதிரவேலு பேபிசரோஜா தம்பதியரின் புத்திரனும், உஷாநந்தினி, உதயகுமார், மதிகுமார், ஜீவநந்தினி ஆகியோரின் அன்புச் சகோதரனும், டபீனா, வஜிதா ஆகியோரின் அன்புச் சித்தப்பாவும், கோபிநாத்தின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2021) திங்கட்கிழமை அவரது இல்லத்தில் இடம்பெற்று, பூதவுடல் பி.ப 4.00 மணியளவில் தகனக்கிரியைக்காக அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்: குடும்பத்தினர்.**


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# 31ஆம் நாள் நினைவஞ்சலி

மண் நெகிழ
28.11.1952

கண் நெகிழ
17.07.2021

உடுவிலில் மொட்டவிழ்ந்து வவுனியாவில் மணம் வீசிய மண்
உதிர்ந்து வீழ்ந்து மாதம் ஒன்றாகியதோ?



## அமரர் நாகலிங்கம் சுந்தரலிங்கம்

(விவசாயத் திணைக்களம் - வவுனியா)

காற்றையும் அன்பால் நுரைக்க வைத்த சுந்தரமே
மரணம் பாட நீ உறங்கி விட்டாயோ!
விரலுக்கு விஞ்சி வீங்கி வேதனை தலையில் தாங்கிய
வாரி வழங்கிய பாரியே அளந்து பறித்தார் உன் கரத்தை
புவியின் மேல் பூத்த ஐயப்பா காலவன் வரும்போது கண்ணை மூடியது ஏன்
சுந்தரமே வேண்டுமென்று அரவணைத்துக் கொள்வதற்காக
கடல் தாண்டிச் சென்ற தலைமகனை காணவில்லை என்றா
உன் முகத்தை மூடி மல்லாந்து சென்றாயோ?
உங்கள் இழப்பினால் எங்கள் கண்ணிமைகள் தாழ்ந்து
திரவ மழை பொழிகிறது.
ஆத்மா சாந்தி பெற ஆண்டவனை வேண்டுகின்றோம்.

**குறிப்பு: அசாதாரண சூழ்நிலை காரணமாக இன்று (16.08.2021) நடைபெற விருந்த வீட்டுக்கிருத்திய நிகழ்வுகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது என்பதனை அறியத் தருகின்றோம்.**

**குடும்பத்தினர்.**

# துயர் பகிர்கின்றோம்



கடந்த 18 ஆண்டுகளாக எம்முடன் இணைந்து மாற்றுத்
திறனாளிகளுக்காக பணியாற்றிய

**கதிரவேலு அகிலகுமார்** அவர்கள்

நேற்று (15.08.2021) ஞாயிற்றுக்கிழமை காலமான செய்தியறிந்து துயரடைகின்றோம். அன்னாரின் பிரிவினால் துயருற்றிருக்கும் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

**யாழ் ஜெய்பூர் புனர்வாழ்வு நிறுவன
ஆலோசனைக்குழு உறுப்பினர்கள்
முகாமைத்துவக்குழு உறுப்பினர்கள்,
பணியாளர்கள்.**

# 29ஆவது ஆண்டு நினைவஞ்சலி

செல்வி
**தம்பிராசா சர்விழி**

தாயின்மடியில்
19.07.1982

விண்ணின் மடியில்
06.08.1992



எங்கள் குல விளக்காய் உதித்த எம்
- செல்லக்கிளி நீ
எங்களை பாதியிலே விட்டுப்
- போவதற்கா?
என் கருவில் பத்து மாதம் இருந்தாய்
- நீ...
பத்து வருடம் எம்முடன் வாழ்வதற்கா?
எம்மை பிரிந்து இருபத்தி ஒன்பது
- வருடங்கள் ஆனாலும்
என்றும் நீ எங்கள் நெஞ்சில் செல்லக்
- கிளி போல் வாழ்ந்திடுவாய்

**கோட்டைக்காடு,
மல்லாகம்**

**குடும்பத்தினர்**

# மரண அறிவித்தல்



## முத்துலிங்கம் மகேஸ்வரி

சாவகச்சேரி கல்வயலை பிறப்பிடமாகவும் சாவகச்சேரி வடக்கு ஐயாகடையடியை வதிவிடமாகவும் கொண்ட முத்துலிங்கம் மகேஸ்வரி (வயது 88) கடந்த (13.08.2021) இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா வள்ளிப்பிள்ளை அவர்களின் மகளும். காலஞ்சென்ற வினாசித்தம்பி நாகமுத்து அவர்களின் அன்பு மருமகளும். காலஞ்சென்ற வினாசித்தம்பி முத்துலிங்கம் அவர்களின் அன்பு மனைவியும். காலஞ்சென்ற A.K. மார்க்கண்டு (ஆசிரியர்). A.K. சோமசுந்தரம் (இளைப்பாறிய தபாலதிபர்) ஆகியோரின் அன்பு சகோதரியும். காலஞ்சென்ற அன்னம்மா (குணம்). காலஞ்சென்ற கு.வி.மகாலிங்கம். காலஞ்சென்ற V.சுந்தரலிங்கம் காலஞ்சென்ற V. கணேசலிங்கம் மற்றும் சோ. சுந்தரி ஆகியோரின் மைத்துனியும். மகேந்திரன் (கனடா). மனோகரன் (கனடா). மகேஸ்வரன் (இலங்கை). காலஞ்சென்ற தேவபாலன் (இலங்கை). மனோரஞ்சினி (கனடா). சுகதாஸ் (கனடா). ஜெகதாசன் (கனடா) ஆகியோரின் அன்புத் தாயாரும். சாந்தம் (இலங்கை). சந்திரவதனா (கனடா). நவரஞ்சிதம் (இலங்கை). நிர்நாளினி (இலங்கை). விஜயரட்ணம் (கனடா). ரஞ்சிதமலர் (கனடா). பக்சலாதேவி (சுதா - கனடா) ஆகியோரின் அனபு மாமியாரும். சுரேந்திரன் (இலங்கை). சுதாகரன் (கனடா). சுதர்சினி (இலங்கை). சசிகரன் (இலங்கை). கஜீபன் (கனடா). தர்சிகன் (கனடா). றுயிக்கா (கனடா). கார்த்தீபன் (பிரான்ஸ்). கஜன் (இலங்கை). நிதர்சன் (இலங்கை). சஞ்சீவ் (இலங்கை). சர்நாளன் (கனடா). அருள்ன் (இலங்கை). வதிர்தா (இலங்கை). ரேசிகா (இலங்கை). வினோதினி (கனடா). அமலன (கனடா). வஜித்தா (கனடா). மகிஷா (கனடா). வதுஷன் (கனடா) டிஷாந் (கனடா). பிரியங்கா (கனடா) ஆகியோரின் பேரத்தியும். சநதியா (ஜேர்மனி). சத்தியா (இலங்கை). ஆகாஷ் ([illegible]). [illegible] (கனடா) அபிஷ்னா (கனடா). அபி (கனடா). சாய்ஷியாம் (இலங்கை). சாய்சுஜன் (இலங்கை). [illegible] (இலங்கை). அனனஜா (இலங்கை). தேவன் (கனடா). சிவாயன் (கனடா). [illegible] (கனடா). [illegible] (கனடா). யஷ்விகா (பிரான்ஸ்). கிஷவிந் (இலங்கை). பவிஷ்னு (இலங்கை) [illegible] பூட்டியும் ஆவார்.

[illegible] (17.08.2021) செவ்வாய்க்கிழமை காலை 9.00 மணியளவில் [illegible] மண் [illegible] மயானத்தில தகனம் செய்யப்படும்.

[illegible] உறவினர் நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

[illegible]
[illegible] : 416 742 1269 (கனடா)
[illegible] : 077 324 9085

தகவல்
மு.மகேஸ்வரன் (வவி - மகன்)
077 355 7742

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

மண்ணில்
09 . 12 . 1949

விண்ணில்
16 . 08 . 2020



## அமரர் திருமதி
## அன்னலட்சுமி செல்வநாயகம்

ஆண்டுகள் கடந்து போகும்...
அரும்புகள் பூவாய்,
காயாய், கனியாய்...
பின்னர் விதையாய்..
விருட்சமாய் வளரும் வீழும்!
தினமும் மனதுக்கு
நின்மதி தந்து...
உங்கள் நினைவுகள்
என்றும் வாழும்!

**கணவர், பிள்ளைகள், மருமக்கள்
பேரப்பிள்ளைகள், உறவினர்கள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# உழைப்பின் அருமை...

ஒரு செல்வந்தர் தனது மகனை, தொழில் மற்றும் படிப்பினையைப் பற்றி தெரிந்து கொள்ள தனது நண்பரின் நிறுவனம் ஒன்றில் பணிசெய்ய 6 மாத காலத்துக்கு அனுப்பிவைத்தார் அவர் மகனோ எந்த வேலையும் செய்யவில்லை. ஆனாலும் தனது நண்பர் மகன் என்பதால் அவரும் கண்டுகொள்ளாமல் 6 மாதம் கடந்தவுடன் ஒரு தங்க நாணயத்தை கூலியாக கொடுத்து அனுப்பினார்.

அந்த நாணயத்தை தனது அப்பாவிடம் மகன் கொண்டு வந்து கொடுத்தான். அதனை வாங்கிய அப்பா அதனை தூக்கித் தூர எறிந்தார். அதைக் கண்ட மகனோ ஒன்றும் கண்டு கொள்ளாமல் தனது படுக்கை அறைக்கு சென்று விட்டான்.

மீண்டும் இன்னொரு தெரிந்த நண்பரிடம் 3 மாதத்துக்குக்கு வேலைக்கு அனுப்பினார் . அங்கும் இப்படித்தான் எந்த வேலையும் செய்யாமல் 3 மாதம் கடத்தினான் ஆனாலும் தனது நண்பர் மகன் என்பதால் அவரும் 2 தங்க நாணயங்கள் கொடுத்து அனுப்பினார். அதையும் அப்பாவிடமே கொண்டு வந்து கொடுத்தான் முன்பு போலவே அந்த 2 நா ணயங்களையும் தூக்கி தூர எறிந்தார். அப்போதும் கண்டு கொள்ளாமல் மாடிக்கு சென்று விட்டான். சிறிது காலம் கழித்து அறிமுகம் இல்லாத ஒருவர் இடத்தில் வேலைக்கு சேர்த்து விட்டார். அங்கு 3 மாதம் வேலை செய்து விட்டு 1/2 தங்க நாணயத்தை ஊதியமாக கொண்டு வந்து கொடுத்தான். முன்புபோலவே அதையும் தூரத் தூக்கி எறிந்தார். ஆனால் இம்முறை அவனுக்கு மிக பெரிய அளவில் கோபம் வந்தது விட்டது.

இது என்ன தெரியுமா? எனது வேர்வை, எனது உழைப்பு. 3 மாதம் தூங்காமல் உழைத்து இருக்கிறேன். அதற்க்கான கூலி! இதனை அலட்சியமாக தூக்கி எறிந்து விட்டீர்களே! எனக் கோபமாகக் கேட்டான்.

அப்பொழுது அப்பா சொன்னார். இதைத்தான் உன்னிடம் நான் எதிர்பார்த்தேன் முன்பு நீ உழைக்காமல் கொண்டு வந்து கொடுத்த தங்க நாணயங்களை நான் தூர எறிந்த பொழுது உனக்கு கோபம் வரவில்லை. காரணம் அப்போது உனக்கு உழைப்பின் அருமை தெரியவில்லை. இப்போது நீ உழைத்து கொண்டு வந்த இந்த தங்க நாணயத்தை நான் எறிந்த பொழுது உனக்கு கோபம் வருகிறது. காரணம் நீ கஷ்டப்பட்டு உழைத்து பெற்று வந்ததால் உழைப்பின் வலிமை உனக்கு தெரிகிறது. இதைத்தான் நான் உன்னிடம் எதிர்பார்த்தேன் என்று சொல்லி மகனையும் அந்த 1/2 பவுண் தங்க நாணயத்தையும் மாறி மாறி முத்தம் இட்டார். உழைக்காமல் எது கிடைத்தாலும் நிலைக்காது. அதன் அருமை தெரியாது. உழைத்து பெற்ற பொருளை ஒருபோதும் மனம் இழக்க நினைக்காது.



# இக்வானா



ஒருவித பெரிய பல்லியின் பெயர்தான் இக்வானா. இது ஆறடிக்கும் அதிகமான நீளமுடையது. நம் நாட்டில் இருக்கும் அரணை மற்றும் ஓணானின் குடும்பத்தைச் சேர்ந்தது இது.

இக்வானாவில் பல வகைகள் இருக்கின்றன. சாதாரண இக்வானாக் கள், தண்ணீர் மீது கிளைத்திருக்கின்ற மரங்களின் மீதுதான் வசிக் கும். கரைகளில் உள்ள பொந்துகளில் முட்டையிடும். பெரும்பா லான நேரம் தண்ணீரிலேயே இருக்கின்ற மற்றொரு வகை இக்வா னாக்கள் "கடல் இக்வானாக்கள்' என்று அழைக்கப்படுகின்றன. ஆனால் இந்தக் கடல் இக்வானாக்களுக்கு தண்ணீரின் அடியில் சுவாசிக்க முடியாது. சுவாசிப்பதற்கு தண்ணீருக்கு மேலேதான் வர வேண்டும்.

அதுவும் எப்போதாவது ஒரு முறை தண்ணீருக்கு மேலே வந்தால் போதும். ஏன் தெரியுமா? மிகவும் குறைவான இதயத் துடிப்புகள் கொண்ட பிராணிகள் இவை. அதனால் இவற்றிற்கு கொஞ்சம் ஆக்ஸிஜன் இருந்தாலே போதும். குளிர்காலத்தில் வெயில் காய் வதற்காகவும் இவை கரைக்கு வரும். பல்லிகளைப்போல இக்வா னாக்களும் புழு பூச்சிகளைச் சாப்பிடும். ஆனால், இவற்றிற்கிடை யில் தாவர உணவை மட்டுமே உண்ணும் இக்வானாக்களும் உண்டு. இக்வானாக்களிலேயே பெரிய உருவமுடையவைதான் தாவர உணவை உண்பவை. தாவிக் குதிப்பதில் இக்வானாக்கள் அபாரத் திறமை பெற்றவை. ஏதாவது ஆபத்து வருவதாக உணர்ந் தால், மரக்கிளையிலிருந்து அந்த நொடியே தாவும். ஏறத்தாழ இருபது அடி உயரத்திலிருந்து இப்படி இவற்றால் தாவ முடியும்.

## திருக்குறள்

**எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும் அப்பொருள்**
**மெய்ப்பொருள் காண்ப தறிவு**

எந்த ஒரு கருத்தை யார் சொல்லிக் கேட்டாலும் அந்த கருத்தினுடைய உண்மைத் தன்மையை கண்டறிவது தான் சிறந்த அறிவுடையார் செயலாகும்.

## ஆங்கிலம் கற்போம்

afraid - பயம்
after - பிறகு
again - மீண்டும்
age - வயது
air - காற்று
alone - தனியாக
already - ஏற்கனவே
always - எப்போதும்
angry - கோபம்
art - சித்திரம்
attack - தாக்குதல்
ball - பந்து
bank - வங்கி
bear - கரடி
beautiful - அழகான
bedroom - படுக்கையறை
below - கீழே
brush - தூரிகை
build - கட்டுதல்
burn - எரித்தல்
business - வியாபாரம்
but - அனால்
candle - மெழுகுவர்த்தி
cap - தொப்பி
careful - கவனமாக
careless - கவனமின்மை

## வழிகாட்டுவோம்







# லியோனார்டோ டாவின்சி

லியொனார்டோ டாவின்சி, உலகப் புகழ்பெற்ற ஓவியர். இவர் வெறும் ஓவியர் மட்டுமல்ல, இத்தாலிய மறுமலர்ச்சிக் கட்டிடக் கலைஞர், கண்டுப்பிடிப்பாளர், பொறியியலாளர், சிற்பி ஆவார்.

ஒரு பல்துறை மேதையாக திகழ்ந்தவர் லியோனார்டோ டா வின்சி. ஓவியத்தில் பெரும் புகழ் பெற்றிருந்தார். குறிப்பாக இவரது, "கடைசி விருந்து" (The Last Supper), "மோனா லிசா" (Mona Lisa) போன்ற ஓவியங்கள் சிறப்பான ஓவியங்கள் என்று பெயர் பெற்று உலகப் புகழ் பெற்றவை ஆகும்.


வானம் ஏன் நீல நிறத்தில் இருக்கிறது என முதன் முதலில் விளக்கம் அளித்தவர் லியோனார்டோ டாவின்சி என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரே நேரத்தில் ஓர் கையால் எழுதி, மறுக்கையால் வரையும் திறன் கொண்டவர் லியோனார்டோ டாவின்சி.

லியோனார்டோ டா வின்சி வரைந்த புகழ்பெற்ற மோனாலிசா ஓவியம், 83% மகிழ்ச்சியாகவும், 9% வெறுப்படைந்த நிலையிலும், 2% அச்சம் மற்றும் 2% கோபத்தை வெளிப்படுத்தும் நிலையிலும் இருக்கிறது என ஓர் மென்பொருள் உதவி கொண்டு அறியப்பட்டது.

கூண்டில் அடைக்கப்பட்ட விலங்குகளை வாங்கும் குணம் படைத்தவர் லியோனார்டோ டாவின்சி. இவர் இவற்றை வாங்கி விடுதலை அளித்து, சுதந்திரமாக உலாவ விடுவார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அழகில் புதினம் செய்யும் புதினா!

காயங்களுக்கு மருந்தாகும் - புதினா இலைகளிலுள்ள வலுவான அழற்சி எதிர்ப்புப் பண்புகள் வெட்டுக்கள், காயங்கள், கொசுக்கள் கடித்தல் மற்றும் தோல் அரிப்புக்களைக் குணப்படுத்த உதவுகின்றன. நீங்கள் புதினா இலைச் சாற்றை பிரித்தெடுத்து தோலில் பாதிக்கப்பட்ட பகுதியில் தடவ வேண்டும். இது காயங்களை குணப்படுத்த உதவுவதோடு சருமத்தில் எரிச்சல் மற்றும் எரியும் உணர்வையும் ஆற்றும்.

நிறத்தை பிரகாசமாக்குகிறது - புதினா இலைகளில் செட்டிக் எதிர்ப்புப் பண்புகள் நிறைந்துள்ளன. இது மாசுபடுவதைத் தொடர்ந்து வெளிப்படுத்தினாலும் தோலில் புள்ளிகள் மற்றும் தடிப்புக்கள் ஏற்படுவதைத் தடுக்கிறது. இது நேரடி சூரிய ஒளியால் நீண்ட காலத்துக்கு சருமத்துக்கு ஏற்படும் சேதத்தையும் குறைக்கிறது. குறைபாடற்ற மற்றும் ஒளிரும் தோற்றத்துக்கு புதினா இலைச் சாற்றை உங்கள் மந்தமான தோலில் தடவவும். பயனுள்ள முடிவுகளுக்கு மாதத்துக்கு ஒருமுறை இவ்வாறு செய்யவும்.

அழுக்குகளை போக்குகிறது - சருமத்தில் உள்ள துளைகளில் அடைந்து கொண்டிருக்கும் அழுக்குகளைப் போக்குகிறது. கிருமிகள் பரவுவதைத் தடுத்து பருக்கள் வருவதைக் குறைத்து விரைவில் ஆற்றுகிறது. வீக்கத்தைக் குறைக்கிறது. எனவே உங்கள் சருமத்தையும் மேனியையும் புதினா பளபளப்பாக்குகிறது. கிருமி வளர்வதைத் தடுத்து மீண்டும் பரு வருவதைத் தடுக்கிறது. உங்கள் சருமத்தை மென்மையாகவும் மிருதுவாகவும் மாற்றுகிறது.

கருவளையத்தை குறைக்க - புதினா இலைகளில் உள்ள அன்டி ஒக்ஸிடெனட்கள் கண்களுக்குக் கீழேயுள்ள கருமையைக் குறைக்க நன்றாக வேலை செய்கின்றன. இது மிகவும் எளிமையான செயல்முறையாகும். ஏனென்றால் நீங்கள் செய்ய வேண்டியது புதினா இலை பேஸ்டை கண்ணைச் சுற்றியுள்ள கருவளையங்களில் தடவி ஒரே இரவில் இருக்க விடுங்கள். இது கண்களுக்குக் கீழேயுள்ள சரும நிறத்தைக் குறைத்து கரும்புள்ளிகளின் தோற்றத்தைக் குறைக்கும்.

முகப்பருவைப் போக்கும் - புதினா இலைகளில் சாலிசிலிக் அமிலம் மற்றும் விற்றமின் ஏ என்பன நிறைந்துள்ளன. இவை சருமத்தில் சரும எண்ணெய் சுரப்பதைக் கட்டுப்படுத்துகின்றன. எண்ணெய்ச் சருமம் உள்ளவர்களுக்கு முகப்பரு வெடிப்பு ஏற்பட அதிக வாய்ப்புள்ளது. புதினா இலைகளிலுள்ள கிருமி எதிர்ப்பு மற்றும் பூஞ்சன எதிர்ப்புப் பண்புகள் வீக்கத்தைத் தடுப்பதுடன் முகப்பருவையும் குணப்படுத்துகின்றன. நீங்கள் செய்யவேண்டியது புதினா இலைகளை முகப்பருவில் தடவி அது காய்ந்து போகும்வரை 15 நிமிடங்கள் விடவும். இது முகப்பரு தழும்புகளை நீக்கி சருமத்தின் துளைகளை சுத்தம் செய்யும்.

# நோய்களுக்கு எதிரி முளைகட்டிய பயறு



முளைகட்டிய பயற்றில் ஊட்டச்சத்து அதிகமாக இருக்கிறது. குறிப்பாக பி12, இரும்புச்சத்து, மக்னீசியம் மற்றும் துத்தநாதம் அதிகம் கிடைக்கிறது.

இதில் அதிகளவு புரதச்சத்து இருப்பதால் வளரும் குழந்தைகளுக்கு நல்ல ஊட்டச்சத்து கிடைக்கும்.

நார்ச்சத்து அதிகளவில் உள்ளதால் செரிமானம் எளிதாகும்.

புற்றுநோய் செல்களை அழித்து சீரான இரத்த ஓட்டத்துக்கு உதவும் தன்மை கொண்டது.

தானிய ஒவ்வாமையை குறைக்கிறது.

உடல் எடையை குறைக்க உதவுகிறது. நோய் எதிர்ப்பு சக்தியை அதிகரித்து உடல் வளர்ச்சியை மேம்படுத்துகிறது.

முளைகட்டிய பயறை தினமும் ஒரு கப் சாப்பிட்டு வர இரத்தத்தில் சர்க்கரையின் அளவு கட்டுப்படும். வயிற்றுப் புண், பெண்களின் கர்ப்பப்பை நோய்கள், வெள்ளைப்படுதல் மற்றும் அல்சரை [illegible]

# 12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கு தடுப்பூசி

## பிரதமர் மஹிந்த அறிவிப்பு

கொழும்பு, ஓக. 16



இலங்கையில் 12 வயதுக்கு மேற்பட்ட சிறுவர்களுக்கும் கொரோனாத் தடுப்பூசி செலுத்துவதற்கு அரசு திட்டங்களை மேற்கொண்டுள்ளது எனப் பிரதமர் மஹிந்த ராஜபக்ச தெரிவித்தார்.

அம்பாந்தோட்டை வைத்தியசாலையில் நிறுவப்பட்டுள்ள சிறுவர்களுக்கான கொரோனா சிகிச்சை நிலையத்தை நேற்றுக் காணொளி ஊடாகத் திறந்துவைத்து உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார். இந்தத் திட்டத்தின்போது ஏற்கனவே நோய் நிலைமைகளை உடைய சிறுவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படவுள்ளது எனவும் அவர் குறிப்பிட்டார். சிறுவர்களைப் பாதுகாப்பதற்கு அரசு மிகுந்த கரிசனையுடன் செயற்பட்டு வருகின்றது எனவும், இதற்காகப் பல திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன எனவும் பிரதமர் தனது உரையில் தெரிவித்தார். (ம-22)


## மரண அறிவித்தல்

### மாணிக்கம் கோகிலராசா



கோப்பாயை பிறப்பிடமாகவும், கொழும்பு நாரஹென்பிட்டியை வதிவிடமாகவும் கொண்ட மாணிக்கம் கோகிலராசா கடந்த (14.08.2021) அன்று காலமானார்.

அன்னார் லோகேஸ்வரியின் அன்புக் கணவரும், குயினி, ஒறெக்சன் ஆகியோரின் தந்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2021) திங்கட்கிழமை இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

077 6606 933

தகவல்:
குடும்பத்தினர்.

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 . 01 . 1943



மறைவு 15 . 08 . 2021

### செல்வநாயகம் லோகநாயகி (லோகம்)

நீர்வேலி மேற்கை (கொட்டைகாடு) பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட செல்வநாயகம் லோகநாயகி நேற்று (15.08.2021) ஞாயிற்றுக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முத்துக்குமார் நாகம்மா தம்பதியரின் அன்பு மகளும், செல்வநாயகத்தின் அன்பு மனைவியும், வக்சலாவின் (ஜேர்மனி) பாசமிகு தாயாரும், மகேஸ்வரி, லோகராணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், தவக்குமாரின் (ஜேர்மனி) அன்பு மாமியாரும், அபிஷ்னா, அக்‌ஷயன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும், வரதராசா (சுவிஸ்), ருக்குமணி (சுவிஸ்), சோதிமலர் (குஞ்சு), குமுதா (சுவிஸ்) ஆகியோரின் பாசமிகு மைத்துனியும், முருகதாசன், ரூபா (கனடா), சுவி (அவுஸ்திரேலியா), கண்ணன் (நோர்வே), திருக்குமரன் ஆகியோரின் பாசமிகு பெரியம்மாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (16.08.2021) திங்கட்கிழமை மு.ப 10.00 மணிக்கு இராச வீதியிலுள்ள அவரது இல்லத்தில் (குமுதினி இல்லம்) நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக நீர்வேலி சீயாக்காடு இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

குமுதினி இல்லம்
இராச வீதி, நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

தகவல்: சு.சிவகுமார்
சோதிமலர் (குஞ்சு)
077 803 4061


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செஞ்சோலை படுகொலை நினைவேந்தினார் சிவாஜி



முல்லைத்தீவு, ஓக. 16

இலங்கை வான்படையின் தாக்குதலில் செஞ்சோலையில் உயிரிழந்த மாணவிகளுக்கு முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரான சிவாஜிலிங்கம் நேற்றுமுன்தினம் அஞ்சலி செலுத்தினார். பொலிஸார் மற்றும் இராணுவத்தினரின் தடைகளை மீறி இந்த அஞ்சலி நிகழ்வு முன்னெடுக்கப்பட்டது.

2006ஆம் ஆண்டு செஞ்சோலை வளாகத்தின் மீது நடத்தப்பட்ட இந்தத் தாக்குதலில் 54 மாணவிகளும் 7 பணியாளர்களுமாக 61 பேர் கொல்லப்பட்டனர். அவர்களின் 15ஆவது நினைவுதினம் நேற்றுமுன்தினம் கடைப்பிடிக்கப்பட ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. எனினும் இராணுவத்தினரும் பொலிஸாரும் இணைந்து நினைவேந்தல் நிகழ்வுகளை பல இடங்களிலும் தடுத்து நிறுத்தினர். இந்த நிலையில் வல்வெட்டித் துறையில் உள்ள தனது அலுவலகத்தின் முன்பாக சிவாஜிலிங்கத்தால் நேற்றுமுன்தினம் நினைவேந்தல் மேற்கொள்ளப்பட்டது. (ம-26)

## இன்று....

மறு அறிவித்தல் வரை இந்த ஊரடங்கு உத்தரவு நாளாந்தம் நடைமுறைப்படுத்தப்படும். இந்தக் காலப்பகுதியில் அத்தியாவசிய சேவைகளுக்கு மட்டும் அனுமதி வழங்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நாடாளாவிய ரீதியில் நடைமுறைப்படுத்தப்பட்டிருந்த மாகாணங்களுக்கு இடையிலான பயணத் தடை கடந்த முதலாம் திகதி நீக்கப்பட்டது. இதற்கு சுகாதாரத் துறை கடும் எதிர்ப்பைத் தெரிவித்தது. அடுத்த இரண்டு அல்லது மூன்று வாரங்களுக்கு நாட்டை முழுமையாக முடக்க வேண்டிய நேரத்தில் இவ்வாறு நாட்டைத் திறப்பது உகந்தது அல்ல என்று கடும் அதிருப்தி தெரிவிக்கப்பட்டது. அத்துடன் கொவிட் இறப்புக்களைக் கட்டுப்படுத்த நாட்டை உடன் முடக்க வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது. இந்த நிலையிலேயே இன்று முதல் பகுதிநேர ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-22)

## கொவிட்....

னாத் தொற்றால் நேற்றுமுன்தினம் உயிரிழந்துள்ளனர். சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகத்தின் உறுதிப்படுத்தலுடன் அரச தகவல் திணைக்களத்தால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் இந்தச் சாவுகள் தொடர்பான விபரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

இதற்கமைய நாட்டில் பதிவான கொரோனாக் காவுகளின் மொத்த எண்ணிக்கை 6 ஆயிரத்து 96ஆக அதிகரித்துள்ளது. நேற்றுமுன்தினம் உயிரிழந்த 161 பேரில் 83 ஆண்களும், 78 பெண்களும் உள்ளடங்குகின்றனர். (ம-22)

## கொரோனா....

இதனைத் தெரிவித்துள்ளது.

இதையடுத்து நாட்டில் இதுவரை அடையாளம் காணப்பட்ட கொரோனாத் தொற்றாளர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 54 ஆயிரத்து 968ஆக எகிறியுள்ளது. இதேவேளை, கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் 2 ஆயிரத்து 387 பேர் குணமடைந்து நேற்று வீடு திரும்பியுள்ளனர். இதற்கமைய நாட்டில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 9 ஆயிரத்து 732ஆக அதிகரித்துள்ளது. (ம-22)

## எதிர்வரும்...

யில் எதிர்வரும் நாள்களில் அதிகரிக்கக் கூடும் இவ்வாறு ஔடத உற்பத்திகள், வழங்குகைகள் மற்றும் ஒழுங்குறுத்துகை இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் வைத்தியர் சன்ன ஜயசுமன எச்சரிக்கை விடுத்தார். அநுராதபுரத்தில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இதன்போது அவர் மேலும் தெரிவித்ததாவது:

'ஆபத்தான சூழ்நிலையை எதிர்கொள்ளப் பொதுமக்கள் தயாராக இருக்க வேண்டும். மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும். பொதுமக்கள் அத்தியாவசிய தேவைகளின்றி வீட்டை விட்டு வெளியேறுவதைத் தவிர்க்க வேண்டும். நாட்டில் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் கொரோனாவைக் கட்டுப்படுத்த வேண்டும். இல்லையேல் நிலைமை மிக மோசமாகிவிடும்' என்றார். (ம-22)

## கிணற்றுக்குள்...

மொன்று அவதானிக்கப்பட்டுள்ளது. பராமரிப்பு இன்றிக் காணப்படும் குறித்த காணிக்கு காணி உரிமையாளர்கள் சென்றபோது, மேற்படி சடலம் அவதானிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் கிளிநொச்சி பொலிஸாருக்குத் தகவல் வழங்கப்பட்டது. இதையடுத்து அங்கு சென்ற குற்றவியல் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-6)

## நிபுணர்கள்...

அவர் குறிப்பிட்டார். நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே இராஜாங்க அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலைக் கட்டுப்படுத்தும் வகையில் தொற்று நோய் ஆய்வுப் பிரிவு, கொரோனாத் தடுப்புச் செயலணி ஆகியன செயற்படுகின்றன. அதற்கு வெளியே பல்வேறு ஆய்வு நிறுவனங்கள், தொழிற்சங்கங்கள் என்பனவும் உள்ளன. அவற்றின் பரிந்துரைகளைச் செயற்படுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும். நாட்டை முடக்கும் விடயத்தில் சுகாதாரத்துறை நிபுணர்கள் உத்தியோகபூர்வமாக எங்களுக்கு ஆலோசனை வழங்க வேண்டும். அவற்றை வழங்கினால் அதனை உடனே செயற்படுத்த அரசு பின்வாங்காது' என்றார். (ம-22)

## திருமண....

வழங்கப்படமாட்டாது எனக் கொரோனாப் பரவலைத் தடுப்பதற்கான தேசிய செயற்பாட்டு மத்திய நிலையத்தின் தலைவரும் இராணுவத் தளபதியுமான ஜெனரல் சவேந்திர சில்வா அறிவித்துள்ளார். அத்துடன், எந்தச் சந்தர்ப்பத்திலும் பொதுமக்கள் ஒன்றுகூட அனுமதி வழங்கப்படமாட்டாது எனவும், நேற்று நள்ளிரவு தொடக்கம் இந்த விதிமுறை அமுலுக்கு வந்துள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். இதேவேளை உணவகங்களில் 50 வீதமான நபர்களையே அனுமதிக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தனர். (ம-22)

## மடு அன்னையின்...

விழாத் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்பட்டது. வெளியிடங்களைச் சேர்ந்த பக்தர்கள் கலந்துகொள்வதற்குத் தடை விதிக்கப்பட்டதுடன், மிகச் சொற்பமான அளவு பக்தர்களே திருவிழாவுக்கு அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

திருப்பலியின் நிறைவில் கோலாகலமாகவும் உணர்ச்சிப் பூர்வமாகவும் இடம்பெறும் மடு அன்னையைத் தாங்கிய ஊர்தியின் ஆசீர்வாத சுற்றுப் பயணமும் வழங்கம்போல் விசாலமாக இடம்பெறாமல் உள் வீதியிலேயே இடம்பெற்றது. (ம)

## வீடொன்றின்...

தாக்குதலில் வீட்டின் முன் நிறுத்தப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் தீக்கிரையானதுடன் இது தொடர்பில் கோப்பாய் பொலிஸாருக்கு முறையிடப்பட்டது. பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ம-20)

## டிப்பர்...

ழந்தவர். நேற்றுக் காலை 10.45 மணியளவில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது. கணவரும் மனைவியும் மோட்டார் சைக்கிளில் பயணித்தவேளை பின்னால் வந்த டிப்பர் வாகனம் மோதி மேற்படி விபத்து இடம்பெற்றது என்று பொலிஸார் தெரிவித்தனர். பின் இருக்கையில் அமர்ந்துசென்ற குடும்பப் பெண்ணே வீதியில் வீழ்ந்து தலை நசியுண்டு உயிரிழந்தார். (ம-26)

## பொலிஸ்....

யாழ் நகரப்பகுதி, நாவற்குழி, அரியாலை, மானிப்பாய் போன்ற இடங்களில் தனிமையில் நடமாடும் வயோதிபர்கள் மற்றும் பெண்களைக் குறிவைத்து அவர்களிடம் சென்றுதன்னை பொலிஸ் என அறிமுகப்படுத்தி சில இடங்களில் கொள்ளையிலும் சில இடங்களில் திருட்டிலும் மேற்படி நபர் ஈடுபட்டு வந்துள்ளார்.

கடந்த 2 வாரங்களில் மட்டும் 6 சம்பவங்களுடன் சந்தேக நபர் தொடர்புபட்டுள்ளார். கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம் நாவற்குழி பகுதியைச் சேர்ந்தவர். அவரிடம் இருந்து 2 தங்கச் சங்கிலி, 17 ஆயிரம் ரூபா பணம், மற்றும் மூன்றரை லட்சம் ரூபா பெறுமதியான பொருள்கள் என்பன மீட்கப்பட்டன. மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றன. (ம-20)

## வவுனியா...

ளிகளால் நிரம்பியுள்ள நிலையில், வவுனியா மருத்துவமனையிலும் தொற்றாளர்கள் நிறைந்துள்ளனர். இதனால் நோயாளர்களைத் தங்க வைப்பதற்கு இடப்பற்றாக்குறை ஏற்பட்டுள்ளது.

எனவே நிலைமையின் தீவிரத்தை உணர்ந்து மக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்று மருத்துவமனையின் பணிப்பாளர் க.ராகுலன் வேண்டுகோள் விடுத்துள்ளார். (ம-6)

## ஆப்கானில்...

ளது. ஆப்கானிஸ்தானின் பெயரை ஆப்கானிஸ்தான் இஸ்லாமிய அமீரகம் என்று மாற்றியுள்ள தலிபான்கள் அதை, உத்தியோகபூர்வமாக அறிவித்துள்ளனர். ஆப்கானிஸ்தானின் அதிபர் கானி, ஆப்கானிஸ்தானில் இருந்து தஜிகிஸ்தானுக்குச் சென்று தஞ்சமடைந்துள்ளார்.

ஆப்கானிஸ்தானில் ஆட்சியில் இருந்த தலிபான்கள் கடந்த 2001ஆம் ஆண்டு அமெரிக்காவால் விரட்டப்பட்டு ஜனநாயக ஆட்சி அமைக்கப்பட்டது. அதன் பின்னர் தலிபான்களை அழிப்பதற்காக அமெரிக்கா 2 ஆயிரம் பில்லியன் டொலர்களில் பல்வேறு திட்டங்களை நடைமுறைப்படுத்திய போதிலும் எதுவும் பயனளிக்கவில்லை.

இந்த நிலையில் ஆப்கானிஸ்தானில் இருந்து அமெரிக்கப் படைகளைத் திரும்பப் பெற முடிவெடுத்து அதன்படி செயற்பட்டு வருகின்றது அமெரிக்கா. இதனால் அமெரிக்காவின் பலம் இன்றி தலிபான்களைச் சமாளிப்பதற்கு அரச படைகள் பெரும் சிரமத்தை எதிர்கொண்டன. மிகமிக வேகமாக முன்னேறிவந்த தலிபான்கள் நேற்று தலைநகர் காபூலுக்குள் நுழைந்துள்ளனர்.

இதையடுத்து தலிபான்களிடம் ஆட்சியை ஒப்படைக்க அரசு இணக்கம் தெரிவித்துள்ளதுடன் அதிபர் கானி தஜிகிஸ்தானுக்குச் சென்று தஞ்சமடைந்துள்ளார்.

**அமெரிக்கத் தூதரகத்தின் மீது தரையிறங்கிய ஹெலிகொப்டர்**

ஆப்கானிஸ்தானின் தலைநகர் காபூலில் உள்ள அமெரிக்கத் தூதரகத்தின் மீது தலிபான்கள் ஹெலிகொப்டர் ஒன்றை தரையிறக்கினார்கள்.

அல் குவைதாவின் முன்னாள் தலைவரான ஒசாமா பின்லேடன் கொல்லப்பட்டபோது அவரின் இருப்பிடத்தின் மீது இவ்வாறு ஹெலிகொப்டரை அமெரிக்கா தரையிறக்கிறது. இது அல் குவைதாவுக்கு பெரும் கௌரவச் சிக்கலாகப் பார்க்கப்பட்டது.

தலிபான்களும் அல் குவைதாவும் மிக நெருக்கமான பயங்கரவாத அமைப்புக்கள். அமெரிக்கா தலிபான்களுக்கு எதிராக நடவடிக்கையை ஆரம்பித்ததே அந்த அமைப்பு அல் குவைதாவை ஆதரிக்கின்றது என்று தெரிவித்துத்தான் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஆஸ்திரேலிய வீரர்களுக்கு

# ஐ.பி.எல். என்பது ஒரு வரப்பிரசாதம்

## பொண்டிங் புகழாரம்



கான்பெரா, ஓக. 16

**ஐ.பி.எல். தொடர் என்பது ஆஸ்திரேலிய வீரர்களுக்கு ஒரு வரப்பிரசாதம். ஆஸ்திரேலியர்களுக்கு மட்டுமல்ல அனைத்து நாடுகளின் வெளிநாட்டு வீரர்களுக்கும் ஐ.பி.எல் ஒரு வரப்பிரசாதம்தான்**

இவ்வாறு ஆஸ்திரேலிய அணியின் முன்னாள் தலைவரும் டெல்லி கேப்பிட்டல்ஸ் அணியின் பயிற்சியாளருமான பொண்டிங் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது வரை மூன்று நான்கு மாதங்களாக ஆஸ்திரேலிய வீரர்கள் அதிகமான கிரிக்கெட் போட்டிகளில் விளையாடவில்லை.

அவர்களுடைய ஆட்டத்தை மீண்டும் கொண்டு வருவதற்கு உயர்தரமான கிரிக்கெட்டில் உலகின் தலைசிறந்த வீரர்களுக்கு எதிராக விளையாட வேண்டியது அவசியம்.

இதுபோன்ற சீதோஷ்ண நிலை மற்றும் வலுவான உள்ளூர் கிரிக்கெட் தொடரில் விளையாடுவது, அவர்கள் உலகக் கிண்ணத்துக்கு தயார் ஆகுவதற்கு ஐ.பி.எல் தொடர் சிறந்த தயார்படுத்துதலாக இருக்கும் என்பதில் சந்தேகம் இல்லை. ஆஸ்திரேலிய வீரர்களுக்கு மட்டுமல்ல ஆசியாவுக்கு வெளியில் உள்ள அத்தனை வீரர்களுக்கும் இது ஒரு வரப்பிரசாதம் தான் என்றார். (ம)

**காணி விற்பனைக்கு**

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு அருகாமையில் A9 பாதையில் இருந்து 1km அரசடி வீதியில் 3¼ பரப்புக்காணி உடன் விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை)

தொடர்பு 077 021 2345

**பணிப்பெண் தேவை**

ஊர்காவல்துறை சுருவிலில் வீட்டை பராமரிப்பதற்கு பணிப்பெண் தேவை.
குடும்பத்தினருடன் தங்குமிட வசதி உண்டு.
சம்பளம் பேசி தீர்மானிக்கப்படும்

தொடர்பு 077 061 6191

**வேலையாட்கள் தேவை**

திருநெல்வேலியில் இயங்கிவரும் எமது நிறுவனம் தேனு களஞ்சியத்துக்கு வேலைக்கு ஆள் தேவை.

1. சிட்டை எழுதுனர்
2. கணக்காளர்
3. கணினி (Computer Data Entry)

நேர்முகத் தேர்வு இன்று (16.08.2021) 11.00 am இடம்பெறும்.

தொடர்பு: 0777110075






# இங்கிலாந்து என்றாலே இரு வீரர்கள் மட்டுமா?

## பீற்றர்சன் ஆவேசம்

லண்டன், ஓக. 16

இங்கிலாந்து என்றாலே இரண்டு வீரர்கள் மட்டும்தான் என்றாகிவிட்டது. துடுப்பாட்டத்தில் ரூட், பந்துவீச்சில் அண்டர்சன். இவர்கள் இருவரையும் தவிர ஏனையோர் சராசரியான பங்களிப்பையே வழங்குகின்றனர் என்று தெரிவித்தார் இங்கிலாந்து அணியின் முன்னாள் தலைவர் அண்டர்சன்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவுக்கு எதிராக தற்போது நடைபெற்றுவரும் தொடரில் மட்டுமல்ல, இதற்கு முன்னர் நடைபெற்ற சில தொடர்களிலும் இங்கிலாந்து வீரர்களின் பெறுபேறு திருப்தி தரும் வகையில் இல்லை.

இரு வீரர்களை மட்டும் நம்பி அணி உள்ளது போலுள்ளது. **இது மாற்றப்பட வேண்டும் என்றார்.** (ம)

# எதற்காக இந்த உஷ்? சிராஜ் வெளிப்படை!

லண்டன், ஓக. 16

விக்கெட் வீழ்த்தியபின் உதட்டில் கை வைத்து கொண்டாடுவது தன்னை விமர்சித்தவர்கள், வெறுப்பாளர்களுக்கு பதிலடி என இந்தியப் பந்துவீச்சாளர் முகமது சிராஜ் தெரிவித்துள்ளார். இங்கிலாந்துக்கு எதிரான 2ஆவது டெஸ்ட் போட்டி லோட்ஸ் மைதானத்தில் நடந்து வருகிறது. முதல் இன்னிங்ஸில் சிறப்பாகப் பந்துவீசிய சிராஜ் 4 இலக்குகளை வீழ்த்தினார். முகமது சிராஜ் விக்கெட் வீழ்த்தும் போதெல்லாம், உதட்டில் விரல் வைத்து, 'உஷ்' 'வாயை மூடுங்கள்' என்று உணர்த்தும் விதத்தில் கொண்டாடுவதை வழக்கமாகக் கொண்டுள்ளார்.

இது குறித்தே தற்போது அவர் கருத்துத் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

'விக்கெட் வீழ்த்திவிட்டு நான் உதட்டில் விரல் வைத்து 'உஷ்' என்ற ரீதியில் கொண்டாடுவது என்னை விமர்சித்தவர்களுக்காகவும், வெறுப்பாளர்களுக்காகவும்தான். அவர்கள் வாயை அடைக்கத்தான் இந்த கொண்டாட்டம். என்னை கடுமையாக விமர்சித்தவர்கள் இருக்கிறார்கள். சிராஜால் இதைச் செய்ய முடியாது, சிராஜால் அதை செய்வது கடினம் என்று விமர்சித்தார்கள் என்னுடைய வெறுப்பாளர்கள். அவர்களுக்கு நான் எனது பந்துவீச்சின் மூலம்தான் பதில் அளிக்கமுடியும், அதில் மட்டும்தான் அவர்களுடன் பேச முடியும் என்று எண்ணினேன். அதனால்தான் விக்கெட் வீழ்த்தியபின், உதட்டில் விரல் வைத்து உஷ் என்றுகூறி கொண்டாடுகிறேன் என்றார். (ம)





# 39 வயதிலும் அண்டர்சனின் மிரட்டலாட்டம்

லண்டன், ஓக. 16

லோட்ஸில் நடைபெற்றுவரும் இந்தியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் ஐந்து இலக்குகளைக் கைப்பற்றியதை அடுத்து, 1950ஆம் ஆண்டுக்குப் பின்னர் டெஸ்ட் கிரிக்கெட்டில் 5 இலக்குகளைக் கைப்பற்றிய வயதான வீரர் என்ற அடைவை நிலைநாட்டினார் இங்கிலாந்து அணியின் வேகப்பந்து வீச்சாளர் அண்டர்சன்.

அண்டர்சன் தனது 39 வயது 14 நாள்களில் இந்த சாதனையைச் செய்தார். இதற்கு முன் ரிச்சார்ட் ஹாட்லி 39 வயதில் இந்த சாதனையைச் செய்திருந்தார்.

ஒட்டுமொத்தமாகப் பார்க்கும்போது, ஆஸ்திரேலியாவின் பேர்ட் அயன்மாங்கர் தனது 49 வயது 313 நாள்களில் தென்னாபிரிக்காவுக்கு எதிராக 1932ஆம் ஆண்டில் மெல்போர்னில் நடந்த டெஸ்ட் ஆட்டத்தில் இரு இன்னிங்ஸிலும் 5 இலக்குகளைக் கைப்பற்றியதே சாதனையாக உள்ளது. (ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 16.08.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.